விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 29 வியாழக்கிழமை (13.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

## அமைச்சரவையில் 5 ராஜபக்ஷக்கள்

(கொழும்பு)
ஸ்ரீ லங்கா பொதுஜன பெர முன தலைமையில் அமைந்துள்ள புதிய
23

### நல்லாட்சி அரசில் உருவாக்கப்பட்ட
## முக்கிய அமைச்சுக்கள் அமைச்சரவையில் இல்லை

(கொழும்பு)
நல்லாட்சி அரசில் உருவாக் கப்பட்ட முக்கிய அமைச்சுக்கள் புதிய அமைச்சரவையில் உள்ள டக்கப்படவில்லை.
நல்லாட்சி அரசாங்
23

### புதிய அமைச்சரவை பதவியேற்பு




### ஒத்த கொள்கையுடையவர்களுடன்
# தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இணைந்து செயற்படத் தயார்
## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



- இனப் படுகொலைக்கு சர்வதேச ரீதியிலான சுயா தீன விசாரணை நடத்தப்பட வேண்டும்.
- வடக்கு கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு தரப்பட வேண்டும்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனால் வெளியிடப்பட்ட கேள்வி - பதில் அறிக் கையில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது.

**கேள்வி** - தனிப்பட்ட முறையில் உங்கள் இந்தத் தேர்தல் வெற்றி உங்களுக்குத் திருப்தியைத் தருகின் றதா?
**பதில்** - நிச்சயமாக !
24

### முல்லைத்தீவில் விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - மாங்குளம் பகுதி
23

### செஞ்சோலை படுகொலை நினைவு நாள் நாளை

(குப்பிழான்)
செஞ்சோலையில் விமா னத் தாக்குதலில் உயிர் நீத்த மாணவிகளின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை வெள் ளிக்கிழமை காலை 9 மணி முதல் முல்லைத் தீவு வள்ளிபுனம்
23

### துணைவேந்தர் பதவிக்கு
## மூன்று பேராசிரியர்கள் பேரவையினால் தெரிவு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த ஆறு பேரில் மதிப்பீட்டுக் குழு மற்றும் பேரவையின் மதிப்பீடு களின் அடிப்படையில் மூவரின் பெயர்கள்
23

### ஒன்றிணைந்து செயற்படத் தயார்
சீனா அறிவிப்பு

(பீஜிங்)
வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிற்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி, இருநாடு களுக்கும் இடையி
23

## பருத்தித்துறை கடலில் 294 கிலோ கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை கடற் பரப்பில் மிதந்து வந்த நிலையில் 294 கிலோ கிராம் கஞ்சா நேற்று அதி
23

## தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் கூட்டமைப்பினர் மட்டுமே
### மகிந்த தரப்பிடம் சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டுமே. அதில் மாற்றுக் கருத் துக்கு இடமில்லை. அதனை தமிழ் மக்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளனர் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் தெரிவித்தார்.
23

### ஒருங்கிணைப்புக் குழுவின்
## வடக்கு இணைத் தலைவராக ஆளுநர் சார்ள்ஸ் நியமனம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவ ட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம்மாவட் டத்துக்கான அவரது
23

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## ஆனந்தன் செல்வநாதன்

(உரிமையாளர்–அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

| மண்ணில் :– 21.05.1948 | விண்ணில் :– 01.08.2013 |
|---|---|

தலைமகனாய் தலைவனாய் தரணிபோற்றும் தந்தையாய்
நிலத்தினிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே
நிலையாக நினைவுகளில் வாழுகின்ற நிலைதந்து
நிறைந்ததுவோ ஏழாண்டுகள் நித்தமும் மறவோமே!
நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெமை
என்றும் சிறப்புடனே வாழவைத்த அப்பாவே!
சென்றிடினும் வாழ்நாளில் எம் சிந்தையிலே வாழ்வீர்
என்றினி உங்கள் எழில்வதனங் காண்போம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-037)

22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இ.இராமசாமி

[இதயன்ஸ் பெருமாள்]

| அன்னை மடியில் 28.11.1948 | ஆண்டவன் அடியில் 13.08.2016 |
|---|---|

ஆண்டுகள் நாலானது
ஆறாத்துயர் நீங்கவில்லை
எண்ணித் தவிக்கிறோம்
எம் துயர் தணியவில்லை
பசியில்லை என்கிறோம்
பட்டினி இல்லை என்கிறோம்
ஆயினும் நீங்களில்லாத
வாழ்வு பாலை நிலமாயிருக்கிறதே

(C-036)

உங்களை இழந்து நிற்கும்
குடும்பத்தினர்.

AROD CARE AND BE FAIR

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
## 12 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 05.09.2020 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1. பிரேரணைகள் இன்றிலிருந்து 26.08.2020 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
2. அங்கத்துவத்தை புதுப்பிக்க வேண்டியவர்கள் புதுப்பித்துக் கொள்ளவும்.

(3558)

க.கோபாலகிருஷ்ணன்
செயலாளர்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
இல:-47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

# மனமுவந்த வாழ்த்துக்கள்

## கௌரவ அங்கஜன் இராமநாதன்



**பாராளுமன்ற உறுப்பினர் யாழ். தேர்தல் மாவட்டம்**
**ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்**
**யாழ். மாவட்டம்**

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் தொண்டனாய் அறிமுகமாகிப் போட்டியிட்டார். அவரது அரசியல் பணியின் மூலம் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடினார். பொது மக்களுக்கான சேவையின் பொருட்டு 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் இவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் நியமனமும் பின்னர் பிரதி விவசாய அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது. இவற்றின் மூலம் யாழ்., வன்னி மாவட்ட மக்களுடன் தன்னைச் சேவையால் இணைத்துக் கொண்டார். அத்துடன் மக்கள் கூட்டம் இவரை நாடிவரத் தொடங்கி அலையெனப் பெருகியது. மக்களை ஆதரவளித்து அணைக்கும் செயல் வீரன், எம் அளவை மண்ணின் மைந்தன், மக்கள் சேவகனாய், காவலனாய் இருந்து மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தனக்கென ஓர் நிரந்தர இடம் தேடிக் கொண்டமையால் 2020.08.05 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் மூலம் தேசியக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகக் களமிறங்கி யாழ். மாவட்டத்தில் வெற்றி பெற்று ஏனையவர்களை விட அதிக விருப்பு வாக்கினைப் பெற்றுச் சாதனை புரிந்தார். இவரின் வெற்றிக் கொண்டாட்டத்தை மக்கள் தமது வெற்றியாக கொண்டாடினர். இவ்வாறு மக்கள் உள்ளங்களில் நிலையாக இருக்கும் திரு. அங்கஜன் இராமநாதன் அவர்கள் 12.08.2020 இல் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமனம் பெற்றமையானது, இவரின் மக்கள் சேவைக்கு கிடைத்த ஆணையாகும். இவ்வாறு உயர் நிலை அடைந்து மக்களின் அத்தியாவசிய தேவையான கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, வீடமைப்புப் பிரச்சினைகட்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கப் பாடுபட வேண்டும் எனவும் தாங்கள் என்றும் மக்கள் சேவையில் நிலைத்து நீடூழி காலம் வாழவேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

**என்றும் தங்கள் சேவையில் நிற்கும்**
**அளவெட்டி வடக்கு அன்புள்ளங்கள்**

(C-035)

# ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் புதிய அமைச்சரவை பதவியேற்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர்.

கண்டி ஸ்ரீ தலதாமாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

இதில் 28 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகள் மற்றும் 40 இராஜாங்க அமைச்சுக்களைக் கொண்ட அமைச்சுப் பதவிகள், மாவட்ட ரீதியான தலைவர்கள், இணைத்தலைவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## அமைச்சரவை அமைச்சர்கள் தொடர்பான விபரம்

- ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பாதுகாப்பு அமைச்சர்.
- பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - நிதி, புத்தசாசனம் - மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.
- நிமால் சிறிபால டி சில்வா - தொழில் அமைச்சர்.
- ஜீ.எல்.பீரிஸ் - கல்வி அமைச்சர்.
- பவித்ராதேவி வன்னியாராச்சி - சுகாதாரத்துறை அமைச்சர்.
- தினேஷ் குணவர்த்தன - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.
- டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழிற்றுறை அமைச்சர்.
- காமினி லொக்குகே - போக்குவரத்துத் துறை அமைச்சர்.
- பந்துல குணவர்த்தன - வர்த்தகத்துறை அமைச்சர்.
- சீ.பி.ரத்நாயக்க - வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர்.
- ஜனக பண்டார தென்னகோன் - அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.
- ஹெகலிய ரம்புக்வெல - வெகுசன ஊடகத்துறை அமைச்சர்.
- சமல் ராஜபக்ஷ - நீர்ப்பாசனத் துறை அமைச்சர்.
- டலஸ் அழகப்பெரும - மின்சக்தித் துறை அமைச்சர்.
- ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ - நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர்.
- விமல் வீரவன்ச - கைத்தொழிற்றுறை அமைச்சர்.
- மகிந்த அமரவீர - சுற்றாடல் துறை அமைச்சர்.
- எஸ்.எம்.சந்திரசேன - காணி அமைச்சர்.
- மகிந்தானந்த அலுத்கமகே - கமத்தொழில் துறை அமைச்சர்.
- வாசுதேவ நாணயக்கார - நீர் வளங்கள் துறை அமைச்சர்.
- உதய பிரபாத் கம்மன்பில - வலுசக்தி துறை அமைச்சர்.
- ரமேஷ் பத்திரன - பெருந்தோட்டத் துறை அமைச்சர்.
- பிரசன்ன ரணதுங்க - சுற்றுலாத்துறை அமைச்சர்.
- ரோஹித அபேகுணவர்த்தன - துறைமுககங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர்.
- நாமல் ராஜபக்ஷ - இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்.
- அலி சப்ரி - நீதி அமைச்சர்

## இராஜாங்க அமைச்சர்கள் தொடர்பான விபரம்

- சமல் ராஜபக்ஷ - உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்.
- பியங்கர ஜயரத்ன - வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்.
- துமிந்த திஸாநாயக்க - சூரிய சக்தி காற்று மற்றும் நீர் உற்பத்தி.
- தயாசிறி ஜயசேகர - பபத்திக் கைத்தறி துறைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி.
- லசந்த அழகியவன்ன - கூட்டுறவு சேவை, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, நுகர்வோர் பாதுகாப்பு.
- சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே - சிறைச்சாலைகள் மறுசீரமைச்சு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு.
- அருந்திக்க பெர்னாண்டோ - தென்னை கித்துள், பனை, இறப்பர் மேன்மை செயற்பாடு, அது தொடர்பான உற்பத்தி செயற்பாடு மற்றும் இறக்குமதி.
- நிமல் லன்சா - கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்.
- ஜயந்த சமரவீர - கொள்கலன் முனையங்கள், துறைமுக வள வசதிகள், இயந்திர படகுகள் மற்றும் கப்பல் தொழில்.
- ரொஷான் ரணசிங்க - காணி முகாமைத்துவ அலுவல்கள் அரச தொழில் முயற்சி காணி மற்றும் சொத்து அபிவிருத்தி.
- கனக ஹேரத் - கம்பனி தோட்டங்களை சீர் திருத்துதல், தேயிலை தோட்டங்கள் சார்ந்த பயிர்ச் செய்கைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதி.
- விதுர விக்ரமநாயக்க - தேசிய மரபுரிமை அருங்கலைகள்.
- ஜானக வக்கும்புர - கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்ச் செய்கை மற்றும் அது சார்ந்த ஏற்றுமதி மேம்பாடு.
- விஜித வேறுகொட - அறநெறி பாடசாலை, பிரிவெனாக்கள், பிக்குமார் கற்கை - பிக்குமார் பல்கலைக்கழகம்.
- ஷெஹான் சேமசிங்க - சமுர்த்தி வதிவிட பொருளாதாரம் நுண்நிதி, சுய தொழில்.
- மொஹான் டி சில்வா - உரம் உற்பத்தி மற்றும் வளங்கள்.
- லொஹான் ரத்வத்தை - இரத்தினக்கல், தங்க ஆபரணங்கள் மற்றும் கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில்கள்.
- திலும் அமுனுகம - வாகன ஒழுங்குறுத்துகை, மோட்டார் வாகன கைத்தொழில்.
- விமலவீர திஸாநாயக்க - வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் வன பாதுகாப்பு நடவடிக்கை.
- தாரக பாலசூரிய - பிராந்திய உறவுகள் நடவடிக்கைகள்.
- இந்திக்க அனுருந்த - கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள்.
- சிறிபால கமலத் - மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும்குடியிருப்புக்கள்மற்றும்பொது உட்கட்டமைப்பு வசதிகள்.
- சரத் வீரசேகர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி.
- அனுராத ஜயரத்ன - கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி.
- சதாசிவம் வியாழேந்திரன் - தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகங்கள் அபிவிருத்தி.
- தேனுக விதானகமகே - கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- சிசிர ஜயகொடி - சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதாரம்.
- பியல் நிஷாந்த டி சில்வா - மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி அறநெறி பாடசாலை கல்விச்சேவைகள் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள்.
- பிரசன்ன ரணவீர - பிரம்புகள், பித்தளை, மட்பாண் டங்கள் மற்றும் மரப் பொருட்கள், கிராமிய பொருட்கள் மேம்பாடு.
- டீ.வீ.சானக - விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி.
- டீ.பீ.ஹேரத் - கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில்.
- சஷிந்திர ராஜபக்ஷ - நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு செய்கை மேம்பாடு மற்றும் விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்பம்.
- நாலக கொடஹேவா - நகர அபிவிருத்தி, கரையோர கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல்.
- ஜீவன் தொண்டமான் - தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள்.
- அஜித் நிவாட் கப்ரால் - நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு.
- சீதா அருதேபொல - திறன் அபிவிருத்தி தொழில் கல்வி மற்றும் தகவல் தொழில்நுடபம்.
- சன்ன ஜயசுமன - ஔடத உற்பத்திகள் வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
- கஞ்சன விஜேசேகர - அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில், துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி.
- சனத் நிஷாந்த - கிராமிய மற்றும் பிதேச குடிநீர் நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி.

## மாவட்ட ரீதியான அபிவிருத்தி சபை தலைவர்களுக்கான நியமனம்

- கொழும்பு - பிரதீப் உதுகொட.
- கம்பஹா மாவட்டம் - சமன் பிரதீப் விதான.
- களுத்துறை - சஞ்சீவ எதிரிமான்ன.
- கண்டி - வசந்த யாப்பா பண்டார.
- மாத்தளை - எஸ். நாமக்க பண்டார.
- நுவரெலியா - எஸ்.பி. திசாநாயக்க.
- காலி - சம்பத் அத்துகோரள.
- மாத்தறை - நிபுண ரணவக்க.
- அம்பாந்தோட்டை - உபுல் கலப்பத்தி.
- யாழ்ப்பாணம் - அங்கஜன் இராமநாதன்.
- கிளிநொச்சி - டக்ளஸ் தேவானந்தா.
- வவுனியா - கே.திலீபன்.
- மன்னார் மற்றும் முல்லைத்தீவு - காதர் மஸ்தான்.
- அம்பாறை - டி. வீரசிங்க.
- திருகோணமலை - கபில அத்துகோரள.
- குருநாகல் - குணபால ரத்னசேகர.
- புத்தளம் - அசோக பிரியந்த.
- அநுராதபுரம் - எச். நந்தசேன.
- பொலநறுவை - அமர கீர்த்தி அத்துகோரள.
- பதுளை - சுதர்ஷன தெனிபிட்டிய.
- மொனராகலை - குமார சிறி ரத்நாயக்க.
- இரத்தினபுரி - அகில எல்லாவல.
- கேகாலை - திருமதி ராஜிகா விக்ரமசிங்க.

## கொலை அச்சுறுத்தல் விடுத்த ஹெரோயின் வர்த்தகர் கைது

(கொழும்பு)

கல்கிஸை - ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த ஹெரோயின் வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள போதைப்பொருள் வர்த்தகர் சயிமா என்பவரின் உதவியாளரான குறித்த நபர் கல்கிஸை ஊழல் தடுப்புப்பிரிவு அதிகாரிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ரஜமாவத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 40 வயதுடைய பிலியந்தலை பிரதேசத்தினை சேர்ந்தவர் என கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## புதிய அமைச்சரவையில் இடம்பிடித்துள்ள 4 தமிழர்கள்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்றுக் காலை கண்டிஸ்ரீதலதா மாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவ மண்டபத்தில் வைத்து பதவியேற்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் குறித்த பதவிப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இந்த நிலையில் நான்கு தமிழர்களில் இருவருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளதுடன், இருவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளன.

இதன்படி, டக்ளஸ் தேவானந்தா கடற்தொழில்துறை அமைச்சராகவும், அலி சப்ரி நீதி அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அதேவேளை சதாசிவம் வியாழேந்திரன் தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும், ஜீவன் தொண்டமான் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துள்ளனர். (ஐ-4)

# அரசாங்கத்துடன் இணைந்துள்ள தமிழ் பிரதிநிதிகளுடன்தான் பேச்சு

## தினேஷ் திட்டவட்டம்

(கொழும்பு)

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்கான எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது. எங்களுடன் இணைந்துள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுடனேயே நாங்கள் அது குறித்து பேசுவோம் என ராஜபக்ஷ அரசின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் நாங்களே. நாங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு இருக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு பிரிவினைவாதம் பேசிக் கொண்டிருந்த கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களே நிராகரிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

அவர்களின் வாக்கு வீதத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் நாங்கள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என அவர்களால் கூறிக்கொண்டிருக்க முடியாது. இதனால் அவர்களுடன் எங்களுக்குப் பேச வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது.



தற்போது அரசில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்போம். முதலில் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியே முக்கியம். அதனைச்செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார். (ஐ-4)

## அமைச்சுப்பதவி கிடைக்காதவர்களும் நிராகரித்தவர்களும்

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட அமைச்சரவையில், பல முன்னாள் அமைச்சர்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியடைந்த போதும், பலர் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன, எஸ்.பி.திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, ரஞ்சித் சியாம் பலபிட்டிய, விஜயதாச ராஜபக்ஷ, ஜோன் செனவிரத்ன, சந்திம வீரக்கொடி, அனுரா பிரியதர்ஷன யாப்பா, டிலான் பெரேரா, எஸ்.பி.திஸாநாயக்க, மகிந்த யாப்பா அபேவர்தன, மகிந்த சமரசிங்க உள்ளிட்டவர்களுக்கு அமைச்சரவையில் இடம் வழங்கப்படவில்லை.

சபாநாயகர் பதவிக்கு மகிந்த யாப்பா அபேவர்தன பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயதாச ராஜபக்ஷ இராஜாங்க கல்வி சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூர கல்வி ஊக்குவிப்பு அமைச்சர் பதவியை நிராகரித்ததாக கூறப்படுகிறது.

எஸ்.பி.திஸாநாயக்க அமைச்சர் இல்லை என்றாலும் நுவரெலியா மாவட்டத்திற்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-4)

## மாநகரசபை உறுப்பினர்கள் சிறிகொத்தாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை மேயர் ரோசி சேனாநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வருமாறு குறித்த உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக நகரசபை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் 60 உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், மாநகரசபை மேயர் உள்ளிட்ட மாநகரசபை உறுப்பினர்கள் சிலரை நீக்க வேண்டும் என, உறுப்பினர்கள் சிலர் கட்சி தலைமையிடம் வலியுறுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இராஜாங்க அமைச்சர்களாக வியாழேந்திரன், ஜீவன்

(கொழும்பு)

கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நேற்று நடைபெற்ற புதிய அமைச்சரவை பதவியேற்பின் போது அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன.


அதில், அஞ்சல் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகத் தொழில் இராஜாங்க அமைச்சராக சதாசிவம் வியாழேந்திரனும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக ஜீவன் தொண்டமானும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## விண்வெளி நிலையத்திற்குச் சென்ற இலங்.தேசியக்கொடி மீண்டும் பூமிக்கு

(கொழும்பு)

இலங்கை இளைஞர்களினால் தயாரிக்கப்பட்ட ராவணா 1 செயற்கைக்கோள் அண்மையில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

அந்த செயற்கைக் கோளை விண்வெளி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட விமானம் கடந்த வாரம் மீண்டும் பூமிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



குறித்த ராவணா 1 செயற்கைக்கோளில் இலங்கையின் தேசியக் கொடி ஒன்றும் வைத்து அனுப்பப்பட்டிருந்தது.

அந்த செயற்கைக்கோள் பூமிக்கு வந்த பின்னர் அதனை உருவாக்கிய தரிது தயாரத்ன அந்தத் தேசியக் கொடியை கையில் ஏந்தி பேஸ்புக் பக்கத்தில் புகைப்படம் ஒன்றும் பதிவிட்டுள்ளார். (ஐ-4)

## இராசிபலன்

13.08.2020
ஆடி 29, வியாழக்கிழமை
நவமி முற்பகல் 10.48 மணிவரை
ரோகினி பின்னிரவு 4.06 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35 -3.05 மணிவரை
சந்திராஷ்டமம் விசாகம்
நல்லூர் கைலாச வாகனம் வளவன்


மேஷம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

திட்டமிட்ட காரியமொன்றில் மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


மிதுனம்

புதிய நட்புகள் இடம்பெறலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.


கடகம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்

தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சிறப்பான நாள்.


கன்னி

நண்பர்களுக்குள் நிலவிய கசப்புக்கள் அகலும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பாக்கிகள் வசூலாகலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


துலாம்

அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், உடல்நலம் சீராகும், இனத்தவர் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும். சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மகரம்

மனதிற்கினிய சம்பங்கள் இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வாழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கும்பம்

பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும், சுபகாரிய செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

உன் இன்பமும், துன்பமும் உனது கையில் இருக்கிறது.

# இராணுவத்தை சர்வதேச அரங்கில் தண்டிக்க இடமளிக்கமாட்டார்

## சரத் வீரசேகர திட்டவட்டம்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து நாட்டில் இராணுவத்தின் கரங்களை கட்டிப்போட்டுவிட்டு விடுதலைப்புலிகளையும், கடற் புலிகளையும் சுதந்திரமாக செயற்பட வைத்தவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனும் அதே புலி புராணத்தையே பாட ஆரம்பித்தனர் என பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப் பட்டுள்ள சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.**

செய்யாத போர்க்குற்றத்தை செய்ததாகக் கூறிஇராணுவத்தை தண்டிக்க முயற்சித்த ஆட்சியை வீழ்த்தி இராணுவத்தையும், சிங்கள பௌத்த கொள்கையையும் பாதுகாக்கும் அரசாங்கமொன்றை உருவாக்கியுள்ளோம். எக்காரணம் கொண்டும் இராணுவத்தை சர்வதேச அரங்கில் தண்டிக்க இடமளிக்கமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இறுதி யுத்தத்தில் நாம் செய்யாத குற்றமொன்றை செய்ததாகக் கூறிமுன்னைய நல்லாட்சியாளர்கள் ஜெனிவாவில் பொய்யான சாட்சியங்களை கொடுத்தனர். அதனை எம்மால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வாறான சூழ்நிலையில் நான் எந்தவித அரசியல் பின்னணியும், தூண்டுதலும் இல்லாது சுயமாக ஜெனிவாவில் எமது இராணுவத்தை நியாயப் படுத்தி பேசினேன். தொடர்ச்சியான எனது முயற்சியை நான் முன்னெடுத்துக் கொண்டே இருந்தேன். எனினும் மங்கள சமரவீர போன்றவர்கள் செய்த அநியாயத்தின் மூலமாக கடந்த காலங்களில் அளவுக்கு அதிகமான சர்வதேச அழுத்தங்களும் புலம்பெயர் புலி அமைப்புகளின் தலைவீடுகளும் ஏற்பட்டது.

ஜெனிவா பிரேரணை கோரிக்கைகளை செய்ய வேண்டும் என்ற எந்தவொரு கட்டாயமும் எந்தவொரு நாட்டுக்கும்



இல்லை. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி யதன் மூலமாக வலுக்கட்டாயமான தலையீடுகள் ஏற்பட்டன.

எமது இராணுவத்தை சர்வதேச அரங்கில் தண்டிக்கும் நிலைமைக்கு கொண்டு சென்றனர். அவர்களின் ஆட்சி தொடர்ந்திருந்தால் இன்று எமது இராணுவத்தினர் வெளிநாடுகளுக்கு சென்றிருக்க முடியாது.

இராணுவத்தைகைது செய்து சிறையில் அடைக்கும் நிலைமையே உருவாகியிருக்கும். சர்வதேச ஆய்வாளர்கள் அறுவர் இலங்கையை நியாயப்படுத்திய போதும் கூட மங்கள சமரவீர மற்றும் நல்லாட்சி உறுப்பினர்கள் நாம் குற்றவாளிகள் என ஜெனிவாவில் கூறினர். அவற்றையெல்லாம் அங்கிருந்தே நான் பார்த்தேன்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து நாட்டில் இராணுவத்தின் கரங்களை கட்டிப்போட்டுவிட்டு விடுதலைப் புலிகளையும், கடல் புலிகளையும் சுதந்திரமாக செயற்பட வைத்தவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனும் அதே புலி புராணத்தையே பாட ஆரம்பித்தனர். அதுதான் உண்மை.

இவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டே நாம் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தோம். சிங்கள பௌத்த நாட்டில் பௌத்த சிங்களத்தை அழிப்பது எம்மால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

இன்று நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம். அதிகாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இப்போது நாம் நாட்டின் சிங்கள பௌத்த கொள்கையை பாதுகாப்போம். அதேபோல் எமது இராணுவத்தை பாதுகாக்கும் சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் என குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# மேர்வின் சில்வாவின் மகனுக்கு பிணை



(கொழும்பு)

கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு மாலக சில்வா தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தலங்கம பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து 2 இலட்சம் ரூபாய் பணத்தை பெற முயன்ற சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## திருவிழா திருப்பலி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்திருவிழா கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நற்கருணைத் திருவிழா நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. திருநாள் திருப்பலி மறுநாள் சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடம்பெறும். (5-7)





**நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 19 ஆம் திருவிழாவான சூர்யோற்சவம் நேற்றுக் காலை நடைபெற்றது. காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற வசந்தமண்டப பூஜையை அடுத்து ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான் உள் வீதி, வெளி வீதியுலா வந்தார்.**

**(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)**



**நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் பாராளுமன்றத்திற்குச் செல்லும் உறுப்பினர்கள் உள்ளடங்கிய கட்சியின் உறுப்பினர்கள் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்து ஆசி பெற்றனர். நேற்று முன்தினம் இரவு நல்லை ஆதீனத்தில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.**

## டக்ளஸ் தேவானந்தாவுக்கு மீண்டும் கடற்றொழிற்றுறை அமைச்சு



(கண்டி)

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழிற்றுறை அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு நேற்று புதன்கிழமை வரலாற்று முக்கியத்துவமிக்க கண்டி தலதாமாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே கடற்றொழிற்றுறை அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

இடைக்கால அரசிலும் அவர் கடற்றொழிற்றுறை அமைச்சராகப் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## அங்கஜன் மற்றும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதவிகள்



(கண்டி)

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர்களாக, நாடாளுமன்றுக்கு தெரிவாகியுள்ள அங்கஜன் இராமநாதன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் வரலாற்று முக்கியத்துவமிக்க கண்டி ஸ்ரீ தலதாமாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமானது.

இதன் முதல் நிகழ்வாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் நியமனம் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக அங்கஜன் இராமநாதன், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக டக்ளஸ் தேவானந்தா, வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக கே.திலீபன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.



மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக காதர் மஸ்தானும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக கபில அத்துக்கோரளவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (5-8)

## பொலிஸ் நிலையத்திற்கு காணி கையளிப்பு



(குப்பிழான்)

காங்கேசன்துறை மத்தி, J\234 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட 1.14 ஏக்கர் விஸ்தீரமான காணி நேற்று முன்தினம் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு கையளிக்கப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ குறித்த காணியின் உறுதிப்பத்திரத்தை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வைத்து சம்பிரதாயபூர்வமாக கையளித்தார். (5-8-18)

## போதைப்பொருள் பாவனையற்ற நாட்டை உருவாக்க உதவுவேன்-சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி யாழ்ப்பாணச் சிறைச்சாலை அத்தியட்சகரின் அழைப்பிற்கிணங்க சிறைச்சாலைக்கு விஜயத்தினை மேற்கொண்டார்.

குறித்த சந்திப்பில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையின் பிரதம சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி தற்போது யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் புனர்வாழ்வு பெற்றுவரும் கைதிகளுடன் கலந்துரையாடிய பணிப்பாளர் சிறைச்சாலையில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப் படுத்தியமைக்காகவும் தற்போது சிறைச்சாலையில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.



அத்தோடு சிறைச்சாலையிலிருந்து குறித்த கைதிகள் விடுதலை செய்யப்பட்ட பின் மீண்டும் போதைப்பொருட்களைப் பயன்படுத்தாமல் அவர்களை கண்காணிக்கும் பொறிமுறைமையொன்றை உருவாக்கி சமூகத்தில் அவர்களை பெறுமதியானவர்களாக மாற்றி எதிர்காலத்தில் போதைப்பொருள் பாவனையற்ற நாட்டை உருவாக்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்தார். (5-8)

# இரு சிறுபான்மை பிரதிநிதிகள் அமைச்சர்களாக பதவியேற்பு

(கொழும்பு)

26 அமைச்சர்களைக் கொண்ட புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இரண்டு சிறுபான்மையின பிரதிநிதிகள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெற்ற புதிய அமைச்சரவைப் பதவியேற்பின் போது குறித்த அமைச்சுப்பதவிகள் வழங்கப்பட்டன.

இதற்கமைய கடற்றொழில் துறை அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவும் நீதி அமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரியும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-2)

# பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணியளவில் வரலாற்று முக்கியத்துவமிக்க கண்டி தலதாமாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. அதன்போதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

19 ஆவது திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதி அமைச்சுப் பதவி வகிக்க முடியாது என்பதற்கு அமைய கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இடைக்கால அரசியல்பாதுகாப்பு அமைச்சு எவருக்கும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அறுதிப்பெரும்பான்மையோடு ஆட்சி அமைக்கும் புதிய அரசியல் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)



# சுற்றிவளைப்பில் 467 பேர் கைது

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 467 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் வர்த்தகங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல்மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காரியாலயம் தெரிவித்துள்ளது. (ஐ-2)

# அமைச்சரானார் நாமல்



(கொழும்பு)

இளைஞர் மற்றும் விளையாட்டு விவகார அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு தான் பெருமைப்படுவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்றுக் காலை கண்டி ஸ்ரீ தலதாமாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவ மண்டபத்தில் வைத்து பதவியேற்றிருந்தனர்.

இந்த நிலையில் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் முகப்புத்தகத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில், தன் மீது நம்பிக்கை வைத்ததற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். (ஐ-4)

## றிசாத் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைய வாக்குமூலமொன்றை வழங்க அவர் நேற்று முற்பகல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன் வாக்குமூலம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# குணமடைந்தோர் 2638

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் பூரண குணமடைந்த நிலையில் வைத்தியசாலையை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டின் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை யானது 2,638 ஆக அதிகரித்துள்ளது.



நாட்டில் இதுவரை பதிவுசெய்யப்பட்ட மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 2,880 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேநேரம் 231 கொரோனாத் தொற்று நோயாளர்கள் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருவதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் 49 நபர்களும் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். (ஐ-4)

# ஹரிணி அமரசூரியவுக்கு தேசியப் பட்டியல் ஆசனம்



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு பேராசிரியர் ஹரிணி அமரசூரிய பெயரிடப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பல்கலைக்கழக பேராசிரியர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளதாக ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ஐ-4)

# உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

உயர்தர புதிய, பழைய பாடத்திட்ட பரீட்சைகளுக்கான நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான அட்டவணைகளை கல்வித் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk என்ற இணையத்தில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: சூரி.செவ் 2 இல் உயரம்: 172cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சுவிஸில் கடை வைத்திருக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டுப் பெண்<br>தொ.இ: B/11089 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 36 1/2 சூரி. செவ் 7 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன் மட்டும்<br>தொ.இ: G/8725 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 37 1/2 செவ் 11 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Q.S in Dubai<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண். சைவ போசனம் மட்டும்<br>தொ.இ: B/11090 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்<br>தொ.இ: G/8732 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ் 9 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் கடையில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11091 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: சூரி, செவ் 11 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: வெளிவாரிப் பட்டதாரி. கணக்காளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/8745 |
| பிறப்பு: 1982 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. விவசாயம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11098 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 1 1/2 சூரி.செவ் 6 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு தகுந்த உத்தியோகத்தர்<br>தொ.இ: G/8748 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



தலைமன்னார் பங்கின் தாய்க் கோயிலான புனித லோறன்சியார் ஆலயத் திருவிழா திருப்பலி, கூட்டுத் திருப்பலி கடந்த திங்கட்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## திருக்குறள் மாநாடு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்தும் 18ஆவது திருக்குறள் மாநாடும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 15,16ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) இரு தினங்களும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் காலை அமர்வு, மாலை அமர்வு என நடத்தப்படவுள்ளது.முதலாம் நாள் நிகழ்வு தமிழ்ச் சங்க தலைவர் மருத்துவ கலாநிதி மா.ஜெயராஜா தலைமையில் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வு மாவட்ட செயலக துணைத் திட்டமிடல் பணிப்பாளர் ந. கௌரிதாசன் தலைமையில் இடம் பெறும். (5-84)

## துணுக்காய் சந்தைகளில் தற்போதைய நிலைகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள ஐயன்கன்குளம் பொதுச்சந்தை, துணுக்காய் பொதுச்சந்தை மற்றும் கோட்டைகட்டியகுளம் வாராந்த சந்தை என்பன பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக எது வித பயன்பாடுகளுமற்று காணப்படுகின்றது.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட ஐயன் கன்குளம் பகுதியில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர் வையடுத்து சுமார் 23 இலட்சம் ரூபா செலவில் பொதுச்சந்தைக்கான கட்டடம் அமைக்கப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டு பாவனைக்கு விடப்பட்டது.

மேற்படி சந்தையானது மூன்று மாத காலத்தின் பின்னர் மூடப்பட்டதுடன் இன்று வரை மூடிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதே போன்று குறித்த காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட துணுக்காய் பொதுச்சந்தையும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டபோதும் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் மேற்படி பிரதேச சபையின் கீழ் உள்ள கோட்டைகட்டியகுளம் வாராந்த சந்தையும் நீண்டகாலமாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வாறு பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று பொதுச் சந்தைகளும் செயலிழந்து காணப்படுகின்றமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேச சபை தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, பொதுமக்கள் குறித்த சந்தைகளைப் பாவிப்பது குறைவடைந்த நிலையில் சந்தைகள் செயலிழந்தன.

கோட்டைகட்டிய குளம் வாராந்த சந்தை தற்போது மாட்டிறைச்சி விற்பனை செய்யும் நிலையமாக செயற்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார். (5-315-8)

## 20 லீற்றர் கசிப்புடன் மூவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு, உழவனூர், தருமபுரம் பகுதிகளில் நேற்று முன்தினம் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 19 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரும் இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (4-5-316)

## சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோ.சைக்கிள் செலுத்தியவர் கைது

(கொடிகாமம்)

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் மந்துவில் பகுதியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். (4-5-114)

## தனிமைப்படுத்தலில் இருந்த கர்ப்பிணிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு - கேப்பாபுலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்த மூன்று கர்ப்பிணிப் பெண்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை குறித்த மூவரும் இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து வருகைதந்த 256 பேர் கடந்த 9 ஆம் திகதி கேப்பாபிலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் , அவர்களில் மூன்று கர்ப்பிணிப் பெண்கள், மகப்பேற்று காலம் நெருங்கிய காரணத்தால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5-8)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெற்று வரும் இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாமில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (5-18)



கரவெட்டி சுகாதார வைத்தியர் பணிமனையினூடாக பொதுமக்களுடன் நேரடி தொடர்பிலுள்ள அரச அலுவலர்களுக்கான PCR பரிசோதனை கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரியால் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டது. (படங்கள்-கரணவாய் செய்தியாளர்)

## 900 மி.கிராம் ஹெரோயினுடன் சாவகச்சேரியில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி -மறவன்புலோ பகுதியில் 900 மில்லி கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலக அரச ஓய்வூதியர் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் ஓய்வூதியர் சங்கத் தலைவர் பொன் தில்லைநாதன் தலைமையில் பூநகரி பிரதேச செயலக மகா நாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்ணேந்திரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓ. ஊ.ந நிதியத் தலைவர் அ.கனகரத்தினம், பூநகரி பிரதேச செயலக கணக்காளர் திருமதி. ஐங்கரன் சுஜேஸ்கா ஆகியோர் கலந்து கொள்வர்.

பிரதேச அரச ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-8-4)

## 6 லீற்றர் கோடா வைத்திருந்தவர் கைது

(கொடிகாமம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் 6 லீற்றர் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-114)

# பிறிதொரு இராச்சியம் தோற்றம் பெற இடமளியோம்; கூட்டு உறுதிமொழியுடன் மலர்ந்தது கோட்டாபய ஆட்சி

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு வரலாற்று சிறப்பு மிக்க கண்டி தலதா மாளிகையில் மகுல்மடுவ வளாகத்தில் நேற்றுக் காலை 8.40 மணியளவில் ஆரம்பமானது. தேசிய கீதம் இசைத்தலை தொடர்ந்து பௌத்த மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.

காலை 9.15 மணியளவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பிரதமர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள், இராஜாங்க அமைச்சர்கள். அமைச்சரவை தொடர்பிலான அரசியலமைப்பின் 4 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள கூட்டு சத்தியப்பிரமாண உறுதிமொழியை பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

"இலங்கை சோசலிஷ குடியரசின் அரசியலமைப்பினை பாதுகாத்தும் நாட்டின் எல்லைக்குள் பிறிதொரு இராச்சியம் தோற்றம் பெறுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ, ஆதரவு , நிதியுதவி வழங்கல். ஆகிய செயற்பாடுகளுக்கு இடமளிக்காமல் இருப்பதாகவும் குறிப்பிட்டுக் கொள்கிறேன். வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை சார் பொறுப்புக்களை திறம்பட மேற்கொண்டு முழுமையாக சேவையாற்றுவேன் எனக் கூட்டு உறுதிமொழி வழங்கினார்கள்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதலில் வழங்கி வைத்தார். 25 மாவட்டங்களுக்குமான தலைவர் நியமனங்கள் வழங்கப்பட்டன. பாராளுமன்றத்துக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்களில் அதிகமானோருக்கு மாவட்ட தலைவர் பதவி வழங்கப்பட்டன.

இரண்டாவதாக 39 இராஜாங்க அமைச்சர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன. கடந்த அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகித்த பலருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகளும், அமைச்சு பதவி வகித்தவர்களுக்கு இராஜாங்க அமைச்சு பதவிகளும் வழங்கப்பட்டன. பலருக்கு எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை.

மூன்றாவதாக 26 அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன. பாதுகாப்பு அமைச்சு பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டது. நிதி மற்றும் புத்தசாசனம், மத விவகாரங்கள், கலாசார அலுவல்கள் அமைச்சு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டது. 26 அமைச்சுகளுக்கான நியமனப் பத்திரங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ



வழங்கி வைத்தார். அமைச்சரவை பதவியேற்கும் நிகழ்வு காலை 11 மணியளவில் நிறைவு பெற்றது. (ஐ-4)

## இம்முறை பாராளுமன்றத்திற்கு 10 பெண் உறுப்பினர்கள் தெரிவு

(கொழும்பு)

நாட்டில் இம்முறை பாராளுமன்றத்திற்கு 76 புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முறை பாராளுமன்றத்திற்கு 13 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோதும் இம்முறை 10 பெண் பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் இதவல தெரிவித்துள்ளார். (ஐ-2)

# கோட்டாபய அரசில் தூக்கி எறியப்பட்ட மலையகம்-இராதாகிருஸ்ணன் காட்டம்

(கண்டி)

புதிய அரசாங்கத்தில் தொடர்ந்தும் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதனை நாங்கள் தேர்தல் காலங்களில் தெளிவாகக் கூறிய போதும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இரண்டு அந்தஸ்துள்ள அமைச்சரும் இரண்டு இராஜாங்க அமைச்சு பதவிகளும் வழங்கப்பட்டிருந்தன. மனோ கணேசன் மற்றும் பழனி திகாம்பரம் அந்தஸ்துள்ள அமைச்சர்களாகவும் நானும் வடிவேல் சுரேஸ் ஆகிய இருவரும் இராஜாங்க அமைச்சர்களாகவும் செயற்பட்டு வந்துள்ளோம்.

ஆனால் இம்முறை மலையகத்திற்கு ஒரே ஒரு இராஜாங்க அமைச்சுப் பதவி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் சார்பாக பலர் அமைச்சரவையில் அங்கம் வகித்தார்கள். ஆனால் இம்முறை ஒருவர் மாத்திரமே அங்கம் வகிக்கின்றார். இதன்மூலம் சிறுபான்மைச் சமூகத்தை அதாவது முஸ்லிம் மக்களையும் மலையக மக்களையும் தொடர்ந்தும் இந்த அரசாங்கம் புறக்கணித்து வருவதைக் காண முடிகின்றது.

எனவே எதிர் காலத்தில் அனைத்து தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இல்லாவிட்டால் எமது இருப்புக் கேள்விக்குறியாகி விடும்.

மேலும் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற சீ.பி.ரத்நாயக்கவுக்கும் வன ஜீவராசிகள் அமைச்சராகவே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மலையக மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## குருநாகல் நகரசபை மேயர் உட்பட ஐவரை கைது செய்வதை தடுக்குமாறு உத்தரவு

(குருநாகல்)

குருநாகல் நகரசபை மேயர் துஷார சஞ்சீவ உட்பட 5 பேரை கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையை ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்த வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தன்னை கைது செய்வதை தடுக்குமாறு பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை செல்லுபடியற்றதாக்குமாறு குருநாகல் நகரசபை மேயர் உட்பட 5 பேர் தாக்கல் செய்திருந்த ரீட் மனு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிபதிகளான எம்.எம்.டி நவாஸ் மற்றும் சோபித ராஜகருணா ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

இதன்போது குறித்த மனு தொடர்பில் 24 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்படவுள்ளதுடன் அதுவரையில் பிடியாணையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-4)

## மூவர் புதுமுக அமைச்சர்கள்

(கொழும்பு)

28 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையில் முதன்முறையாக அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ள மூன்று புதுமுக பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்று கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நடைபெற்ற புதிய அமைச்சரவை பதவியேற்பின் போதே குறித்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

இதற்கமைய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக நாமல் ராஜபக்ஷவும் நீதி அமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரியும் வலுசக்தி அமைச்சராக உதயகம்மன்பிலவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-2)

## பாராளுமன்றம் செல்வதற்கு அனுமதி கோரியுள்ள பிரேமலால்

(கொழும்பு)

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொக்கா மல்லி எனப்படும் பிரேமலால் ஜயசேகர 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற முதல் அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதியைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் அதிகாரிகளிடம் விடுக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை சிறைச்சாலைகள் தலைமையகத்தால் நீதிமன்ற அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற அமைச்சின் அனுமதிக்கு அமைய பிரேமலால் 20 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு வருகை தரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## பாராளுமன்ற கன்னியமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி

(கொழும்பு)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்ற கன்னியமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கமைய அமர்வு ஆரம்பமாகும் நேரம் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இவ்வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-2)

# வெளியானது பாராளுமன்ற சுகாதார வழிகாட்டல்கள்

# உரையாற்றும் போது கூட முகக் கவசம் அகற்றக்கூடாது

(கொழும்பு)

**பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது முகக்கவசங்களை அகற்றவோ அல்லது கீழிறக்கவோ கூடாது என சுகாதார வழிகாட்டுதல் குறிப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.**



புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சுகாதார வழிகாட்டுதல் குறிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் மேலும் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையாக, சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டுதல் குறிப்புக்கள், பாராளுன்ற செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

21 குறிப்புக்களைக் கொண்ட அந்த வழிகாட்டல் அறிக்கை வெளியாகியுள்ளது. அதன்படி, பாராளுமன்றத்தின் உள்ளே அனைத்து எம்.பிக்களும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது கூட முகக்கவசங்களை அகற்றவோ அல்லது கீழிறக்கவோ கூடாது.

அனைத்து உறுப்பினர்களும் ஒதுக்கப்பட்ட இருக்கையில் மட்டுமே அமர வேண்டியது கட்டாயமாகும். அவர்கள் ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமராத போதெல்லாம் ஒருவருக்கொருவர் ஒரு மீற்றர் தூரத்தை பராமரிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளும் பாராளுமன்ற ஊழியர்களும் பார்வையாளர் பகுதியில் உள்ள அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும் என்று வழிகாட்டுதல்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்ற கட்டட அறைகளின் ஒவ்வொரு நுழைவாயிலிலும் கைகளை சுத்தம் செய்யும் வசதி இருக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் அறைக்குள் நுழைவதற்கு முன்பு கைகளை கழுவ வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட பொருட்களான மொபைல், ஹெட்போன், பேனாக்கள் போன்றவற்றை பரிமாறிக் கொள்ளக்கூடாது. கட்டிப் பிடிப்பதையும் கைகுலுக்குவதையும் தவிர்க்க வேண்டும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-2)

# சுற்றுலாத்துறைக்கு புதிய செயலி



(கொழும்பு)

சுற்றுலாத்துறையை மேம்படுத்தக் கூடிய வகையில் புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை இலங்கை சுற்றுலா சபையின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்தையும் உள்ளடக்கிய இலங்கை சுற்றுலா பயன்பாடு இப்போது தயாராக உள்ளது என்பதை உறுதிப்படுத்த இலங்கை சுற்றுலா மகிழ்ச்சியடைகிறது மற்றும் ஒன்லைன் விசா செயல்முறையுடன் இணைக்க குடிவரவுத்துறையின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2084

Search for people, places and things

Nagendram Home

### ப்ரியா

உண்மையான அன்பு ஒருவரிடம் கிடைத்தாலும் இது நிலைக்குமா? என்றும் நீடிக்குமா? என்ற எண்ணத்திலேயே அன்பைக் கூட முழுமையாக அனுபவிக்காமல் வாழ்கிறோம்...



### சுயந்தா



அன்பு எவ்வளவு அழகானது என்று உன்னிடம் அறிந்தேன்... அதே அன்பு எவ்வளவு வலிகளைத் தரும் என்பதையும் உன்னிடமே அறிந்தேன்...

### ஷாம்

உனக்கு பிடித்த பலருடன் பழகுவதை விட, உன்னை மட்டுமே பிடிக்கும் ஒருவருடனே பழகிப் பார் உன்னையே நீ புரிந்து கொள்வாய்



### சூரியா



தொலைத்தால் கிடைக்கும் பொருள் அல்ல எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் கிடைக்காத பொக்கிஷம் உன் அன்பு..!

### சிவா

எதையுமே எதிர் பார்க்காமல் நம்மை ஒருவர் நேசிக்கிறார் என்றால்... அப்போதே புரிந்து கொள் ஆங்கள் அவர் நம் அன்பை தவிர வேறு எதையும் எதிர் பார்க்கவில்லை என்று...



### ஆதி

நடந்ததை நினைத்து அழுது கொண்டு இருப்பது வாழ்க்கை அல்ல அதை மறந்து நம்மை அழ வைத்தவர்களுக்கு முன்னால் சிரித்த முகத்தோடு வாழ்வதே சிறந்த வாழ்க்கை..!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சொத்து விபரங்களை அறிவிக்காவிடின் சட்டத்தை மீறுபவர்களாக கருதப்படுவர்

## தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மற்றும் தெரிவாகாதவர்கள் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவில் கையளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விபரங்களை உரிய காலத்தில் கையளிக்க தவறுபவர்கள் சட்டத்தை மீறுபவர்களாக கருதப்படுவர் என்பதோடு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அவர்களைப் பற்றி அறிக்கையிடும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.**

இவ்விடயம் தொடர்பில் நேற்று புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் திருத்தச் சட்டத்திற்கமைய, 1975 ஆம் ஆண்டு இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகும் வேட்பாளர் தனது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

எனவே தேர்தலில் வாக்களிப்பதற்கு முன்னர் அல்லது முதலாவது பாராளுமன்ற அமர்வு இடம்பெறுவதற்கு முன்னர், குறித்த வேட்பாளர்கள் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தேர்தல் ஆணைக்குழுவில் கையளிக்க வேண்டும்.

தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளவர்கள் இதுவரையில் தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை கையளிக்க முடியாதவர்கள் உடனடியாக அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாகவோ அல்லது நேரில் வந்து தேர்தல் ஆணைக்குழுவில் கையளிக்க வேண்டும்.

இதே போன்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாத வேட்பாளர்கள் இம்மாதம் 7 ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 6 ஆம் திகதிக்கு முன்னர் தமது சொத்து விபரங்களை தேர்தல் ஆணைக் குழுவில் வெளிப்படுத்த வேண்டும்.

சொத்து விபரங்களை வெளிப்படுத்தாதவர்கள் 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் திருத்தச் சட்டத்திற்கமைய , 1975 ஆம் ஆண்டு இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற தவறை இழைப்பவர்களாகக் கருதப்படுவதோடு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அவர்களைப் பற்றி அறிக்கையிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 6 பேர் பலி; 22 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானின் எல்லையிலுள்ள பாகிஸ்தானிய நகரத்தின் ஒரு சந்தையில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 22 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் சாமன் நகரத்தின் ஹாஜி நிடா சந்தையில் கடந்த திங்கட்கிழமை மாலை இந்த சக்திவாய்ந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்ததுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"ஆறு முதல் ஏழு கிலோகிராம் எடையுடைய வெடிபொருட்கள் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டு ரிமோட் கொண்ட்ரோல் சாதனம் மூலம் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பில் ஒரு எல்லைப்புற படை வீரர் உட்பட குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு மற்றும் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 10 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு, எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும், போதைப் பொருள் தடுப்புப் படையினர் சென்ற வாகனத்தை குறி வைத்து, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த குண்டு வெடிப்புக்கு, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கடும் கண்டனம் தெரிவித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நாட்டின் பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்

## நியூஸிலாந்து பிரதமர்



(வெலிங்டன்)

நியூஸிலாந்தின் பொதுத் தேர்தலானது ஒத்திவைக்கப்படலாம் என்று அந்நாட்டுப் பிரதமர் ஜசிந்த ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கு பின்னர் நியூஸிலாந்தில் புதிய கொரோனா தொற்று நோயாளர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு பணிகளை ஜசிந்த ஆர்டர்ன் தாமதப்படுத்தியுள்ளதுடன் , செப்டெம்பர் 19 ஆம் திகதி நடைபெறவிருந்த பொதுத் தேர்தலுக்கான பாராளுமன்ற கலைப்பினை அடுத்த திங்கள் வரையும் அவர் ஒத்திவைத்துள்ளார்.

தேர்தலை தாமதப்படுத்துவது தொடர்பில் உறுதியான தீர்மானம் எதனையும் அவர் எடுக்காத நிலையில், அதற்கான ஆலோசனைகளை வழங்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

102 நாட்களுக்கு பின்னர் செவ்வாய்க்கிழமை ஆக்லாந்தில் ஒரு குடும்பத்தில் நால்வர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் 102 நாட்களுக்கு பின்னர் அந்த நகரம் 3 ஆம் நிலை கொரோனா அபாயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# நக்சலைட் தீவிரவாதிகள் நால்வர் சுட்டுக்கொலை


(டில்லி)

சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினருடன் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 4 நக்சலைட் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுக்மா மாவட்டம் ஜாகர்குன்டாவில் உள்ள வனப்பகுதியில் நக்சலைட் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதன்பேரில் அங்கு கோப்ரா படையினர், சி.ஆர்.பி.எப்.படையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது.

இதில் 4 நக்சலைட் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பஸ்தர் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)




# கொரோனா வைரஸ் பரவல் உலகளவில் இந்தியா முதலிடம்

**(சென்னை)**

**கடந்த ஒரு வாரத்தில் உலகளவில் நாள்தோறும் கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்படுபவர்களின் பட்டியலில்  இந்தியா முதலிடத்தில் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித் துள்ளது.**

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக ஒரேநாளில் 61 ஆயிரத்து 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 835 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 23 இலட்சத்து 28 ஆயிரத்தை கடந்துள்ளதுடன்,

உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 46 ஆயிரத்து 188 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# பேருந்து தீ பிடித்து எரிந்ததில் குழந்தை உட்பட ஐந்து பேர் பலி

(டில்லி)

கர்நாடகா மாநிலம் சித்ர துர்கா மாவட்டத்தில் பேருந்து ஒன்று எரிந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட ஐந்து பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் சித்ர துர்கா மாவட்டம் அருகில் உள்ள ஹிரியூர் என்ற இடத்தில் நேற்றிரவு தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்த போது திடீரென தீப்பிடித்து எரிந்தது.

பேருந்தில் பயணம் செய்த 30இற்கும் மேற்பட்டோர் அலறியடித்து கீழே இறங்க முயற்சித்தனர்.



அதற்குள் தீ பேருந்து முழுவதும் பரவியது. இதில் ஒரு குழந்தை உட்பட ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 27 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(2)

# பசும் பாலை விற்பனை செய்யாத அபூர்வ கிராம மக்கள்

(மும்பை )

மகாராஷ்டிராவில் மாநிலம் ஹிங்கோலியில் ஏலேகாவ் கவாலி என்ற கிராமத்தில் தலைமுறை, தலைமுறையாக பசும் பாலை விற்பனை செய்யாத பழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது.

மகாராஷ்டிராவில் மாநிலம் ஹிங்கோலியில் ஏலேகாவ் கவாலி என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் 90 சதவீத வீடுகளில் கால்நடைகள் உள்ளன.

எனினும் இந்த கிராம மக்கள் பாலினை விற்பனை செய்வது கிடையாது. ஆனால் பால் தேவைப்படுபவர்களுக்கு இலவசமாக கொடுத்து வருகின்றனர்.

பாலை விலைக்கு கொடுக்காதது குறித்து அந்த கிராமத்தை சேர்ந்த கிராம மக்கள் தெரிவிக்கையில்,

“கிராமத்தின் பெயரான ஏலேகாவ் கவாலி என்றாலே பால்காரர்களின் ஊர் என்பது பொருள். எங்களை கிருஷ்ணர் கடவுளின் வழிதோன்றல்களாக நினைக்கிறோம்.

எனவே நாங்கள் பாலை விற்பனை செய்வது இல்லை. வழக்கமாக கிருஷ்ண ஜெயந்தி இங்குள்ள கிருஷ்ணர் கோவிலில் கோலாகலமாக கொண்டாடப்படும்.

தலைமுறை, தலைமுறையாக பாலை விற்பனை செய்யாத பழக்கம் அந்த கிராமத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது. இதை இந்துகள் மட்டுமன்றி மற்ற மதத்தினரும் பின்பற்றி வருகின்றனர்.

இந்து, முஸ்லிம் அல்லது எந்த மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும், எங்கள் கிராமத்தை சேர்ந்த ஒருவர் கூட பாலை விற்பனை செய்வது இல்லை.

90 சதவீத வீட்டில் பசு, எருமை, ஆடுகள் போன்ற கால்நடைகள் உள்ளன” என அக் கிராம மக்கள் தெரிவித்தனர். (2)

# கொரோனா காரணமாக சீன ,அமெரிக்க உறவு நிலை உடைந்துவிட்டது

## ட்ரம்ப் தெரிவிப்பு





(வோஷிங்டன்)

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் உடன் தனக்கு இருந்த உறவு கொரோனா வைரஸ் பரவல் காரணமாக குறைவடைந்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் வானொலி நேர்காணல் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், குறித்த உறவு நிலை தேய்வு காரணமாக நீண்ட காலமாக தான் சீன ஜனாதிபதியுடன் பேசவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

“நான் சீன ஜனாதிபதியுடன் நீண்ட நாட்களாக நல்ல உறவை பேணி வந்தேன். அவரை எனக்கு பிடிக்கும். ஆனால் தற்போது அவ்வாறு இல்லை” எனத் தெரிவித்துள்ளார்.


இதேவேளை கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலேயே தனது மனநிலை மாறியதாக தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப், திடீரென தமது உறவு தொடர்பாக வித்தியாசமாக உணர்ந்ததாகவும், அதன் காரணமாக நீண்ட நாட்களாக அவருடன் தான் பேசவில்லை எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான வர்த்தக உறவு நிலைகள் ஏற்கனவே முறுகல் நிலையினை எட்டியுள்ள நிலையில், அமெரிக்காவில் மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் பரவலானது வர்த்தக முரண்பாடுகளை விட மோசமான விளைவுகளைத் தோற்றுவித்திருப்பதாக ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

“இது வர்த்தக முரண்பாடுகள் தோற்றுவித்த விளைவுகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமானவை. இது மிகவும் இழிவான செயற்பாடு” என இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் கடந்த 2019ஆம்ஆண்டு சீனாவில் கண்டறியப்பட்ட நிலையில், இது வரை உலகளாவிய ரீதியில் குறித்த வைரஸ் காரணமாக 20 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, 7 இலட்சத்து 35 ஆயிரத்து 370க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவற்றுள், 5.1 மில்லியனுக்கும் அதிகமான பாதிப்புகள் மற்றும் ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 160க்கும் அதிகமான இறப்புகள் அமெரிக்காவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# கடுமையான ஆய்வு மற்றும் மதிப்பீடு தேவை

## ரஷ்ய தடுப்பூசி குறித்து உலக சுகாதார அமைப்பு கருத்து

(ஜெனீவா)

**உலகத்தின் முதல் தடுப்பூசியை பதிவு செய்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ள நிலையில், கடுமையான ஆய்வு தேவை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**





கொரோனா வைரஸ் என்ற பெயரை கேட்டாலே உலகமே அஞ்சி நடுங்குகிறது. இந்த வைரஸின் பிடியில் 200இற்கும் மேற்பட்ட நாடுகள் சிக்கி தவிக்கின்றன. கொரோனாவுக்கு முடிவு கட்ட தடுப்பூசி ஒன்றுதான் ஆயுதமாக இருக்கும் என கருதப்படுகிறது.

அதனால்தான் இதுவரை வேறு எந்த தொற்று நோய்க்கும் இல்லாத அளவில், கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு எதிராக உலகமெங்கும் ஏறத்தாழ 165 தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டு வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.

இவற்றில் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் 'கோவிஷீல்டு' உள்ளிட்ட 6 தடுப்பூசிகள் மட்டும் பரிசோதனையின் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

கொரோனாவால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக விளங்கும் ரஷ்யாவில் அந்நாட்டின் இராணுவ அமைச்சகமும், கமலேயா தொற்று நோயியல், நுண்ணுயிரியல் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனமும் சேர்ந்து ஒரு தடுப்பூசியை உருவாக்கி உள்ளன.

இந்தத் தடுப்பூசி பரிசோதனைகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டுள்ள நிலையில், விரைவில் பதிவு செய்யப்படும் என தகவல்கள் வெளிவந்தன. அதன்படி, அந்த தடுப்பூசி பொது மக்கள் பயன்பாட்டுக்காக தயாராகி நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

இந்தத் தகவலை வெளியிட்ட ரஷ்ய ஜனாதிபதி புடின், கொரோனா தடுப்பூசிக்கு 'ஸ்புட்னிக்-வி' என பெயரிடப்பட்டுள்ளதாகவும் இது மிகவும் திறம்பட செயற்படுகிறது.

இது ஒரு நிலையான எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது. இந்த தடுப்பூசியானது, தேவையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டது. இந்த தடுப்பூசி ஆற்றல்மிக்கது என்பது சோதனைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பானது எனவும் தெரிய வந்துள்ளது" என தெரிவித்தார். இந்த நிலையில், ரஷ்யாவின் கொரோனாத் தடுப்பூசி குறித்து கருத்து தெரிவித்த உலக சுகாதார அமைப்பு பாதுகாப்பு ஆய்வுகளை மிகக் கடுமையாக ஆய்வு செய்ய வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் 3வது கட்ட சோதனையை நேற்று தொடங்கியதாக ரஷ்யா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# தென்சூடானில் இராணுவம்- பொதுமக்கள் மோதல் 70 பேர் உயிரிழப்பு, பலர் காயம்

(கார்டும்)

தென் சூடானில் இராணுவத்தினருக்கும் ஆயுதமேந்திய பொதுமக்களுக்கிடையே நடந்த மோதலில் குறைந்தது 70 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச அமைப்பின் அமைதி காக்கும் பணி நேற்று முன்தினம் செவ்வாயன்று தென் சூடான் பகுதியில் முன்னெடுத்த ஆயுதக் குறைப்பு பயிற்சி தொடர்பான கருத்து முரண்பாட்டினால் இந்த வன்முறை தூண்டப்பட்டுள்ளதாக ஐ.நாவின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் சுட்டிக் காட்டினார்.

துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட தென் சூடான் ஜனாதிபதி சல்வா கீருக்கும் போட்டியாளரான ரிக் மச்சருக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட மிகச் சமீபத்திய சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பொதுமக்கள் நிராயுதபாணியாக்கம் செய் ப்படுகிறது. இந்நிலையிலேயே ஆயுதக் குறைப்பு பயிற்சி தொடர்பான கருத்து முரண்பாட்டினால் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. தென் சூடான் 2011 இல் சூடானில் இருந்து சுதந்திரத்தை அறிவித்தது.

ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அது ஒரு அழிவுகரமான உள்நாட்டுப் போரில் மூழ்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)



# ஈரான் மீதான ஆயுதத் தடை நீடிக்கக்கோரும் வளைகுடா நாடுகள்

(டெஹ்ரான்)

ஈரான் மீதான ஐ.நா. ஆயுதத் தடையை மேலும் நீடிக்க வேண்டும் என 6 வளைகுடா நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஈரான் மீதான ஐ.நா. ஆயுதத்தடை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் முடிவுக்கு வர உள்ளது.

எனவே ஈரான் மீதான இந்தத் தடையை மேலும் நீடிக்க வேண்டும் என ஐ.நா., பாதுகாப்பு சபையிடம் வலியுறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், ஓமான், குவைத் மற்றும் பஹ்ரைன் ஆகிய 6 வளைகுடா நாடுகள் ஈரான் மீதான ஐ.நா. ஆயுத தடையை நீடிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக வளைகுடா ஒத்துழைப்பு சபை, ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கடிதமொன்றை எழுதியுள்ளது.

இதில் ஈரான் போர் விமானங்கள், இராணுவ தாங்கிகள் மற்றும் போர்க் கப்பல்கள் போன்ற வெளிநாட்டு தயாரிப்பு ஆயுதங்களை வாங்குவதை தடுக்கும் ஆயுத தடையை நீடிப்பதற்கு மேற்கூறிய 6 நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஈரான் அண்டை நாடுகளில் ஆயுத தலையீடுகளை நிறுத்தவில்லை. நேரடியாகவும் ஈரானால் பயிற்சியளிக்கப்பட்ட ஆயுத இயக்கங்கள் மூலமாகவும் அந்த நாடு ஆயுத பரிமாற்றங்களில் ஈடுபட்டு வருகின்றது. ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சண்டையிட்டு வரும் சவுதி அரேபியா, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆயுதங்களை வழங்கி வருகின்றது' என குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே வளைகுடா நாடுகளில் இந்த நடவடிக்கைக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. வளைகுடா ஒத்துழைப்பு சபையின் இந்தக் கடிதம் அமெரிக்க நலன்களுக்கு சேவை செய்யும் பொறுப்பற்ற செயல் என ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் அப்பாஸ் மவுசாவி தெரிவித்துள்ளார். (2)

# சொத்து விபரங்களை அறிவிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

**பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களில், இதுவரை தமது சொத்து விபரங்களை அறிவிக்காத வேட்பாளர்களின் பெயர்களை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.**

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள், வேட்பு மனுத் தாக்கல் செய்து முதல் மூன்று மாதங்களுக்கு தமது சொத்து விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன் தமது சொத்து விபரங்கள் அடங்கிய அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வேட்பு மனுத்தாக்கல் செய்து தற்போது சுமார் ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளதாக பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.



நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஏழாயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரை தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சொத்து விபரங்களை அறிவிக்காதவர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரி, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பமொன்றை அனுப்பியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# இரண்டு கோடி பெறுமதியான போதை மாத்திரைகள் மீட்பு



(கொழும்பு)

சுமார் இரண்டு கோடி 48 லட்சம் ரூபா மதிப்புள்ள 4 ஆயிரத்து 960 போதை மாத்திரைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒரு அட்டை பெட்டியில் மறைத்து விமானத்தின் மூலம் இப் போதை மாத்திரைகள் இலங்கைக்கு கடத்தப்பட்டுள்ளன.

நெதர்லாந்திலிருந்து கொழும்பு 15 பகுதியில் உள்ள ஒரு முகவரிக்கு இப் பெட்டி அனுப்பப்பட்டுள்ள போதிலும், இதுவரை பொதியை எடுத்துச் செல்ல யாரும் முன்வரவில்லை எனச் சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# முதல் அமைச்சரவை கூட்டத்தில் அரசியலமைப்பு மாற்றம்; வரவு - செலவுத் திட்டம் குறித்து விவாதிக்கப்படும்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் அரசியலமைப்பு மாற்றங்களுக்கான முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்கும், புதிய வரவு-செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதிலும் முன்னுரிமை அளிக்கும் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றுவதற்கு மக்கள் ஒரு பெரிய ஆணையை வழங்கியதாகவும் எனவே புதிய அமைச்சரவை இந்தச் செயன்முறையைத் தொடங்க அங்கீகாரம் வழங்க முன்னுரிமை அளிக்கும் என்றும் அரசாங்கத்தின் உயர் மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# குருநாகல் நகரசபை முடக்கம்

(கொழும்பு)

குருநாகல் நகரசபையின் அனைத்து நடவடிக்கைகளும் நேற்று முன்தினம் முடங்கிய நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பில்மேலும் தெரியவருவதாவது,

குருநாகல் புவனேகபாகுவின் அரசவை எனக் கருதப்படும் கட்டடத்தை இடித்தது தொடர்பாக குருநாகல் மாவட்ட மேஜர் உட்பட 3 அதிகாரிகளை கைது செய்ய உத்தரவு பிறப்பிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் குருநேகலா நகராட்சி மன்றத்தின் அனைத்து ஊழியர்களும் பணிப் புறக்கணிப்பினை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக நகரத்தை சுத்தம் செய்தல், குப்பைகளை அகற்றல், தீயணைப்புச்சேவை என அனைத்து சேவைகளும் முற்றிலுமாக முடக்கப்பட்டது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞான மார்க்கம்!

ஒரு காடு. அங்கே ஒரு மரத்தடியிலே ஒரு ஞானி உட்கார்ந்திருந்தார். அந்தப் பக்கமாக வருவான் தினம் ஒரு ஆள். விறகு வெட்டிக் கொண்டு போவான். தினமும் வந்து விறகு வெட்டி அதை விற்று வரும் வருமானத்தை வைத்துப் பிழைத்துக் கொண்டிருந்தான். தினமும் இதைக் கவனித்தார் அந்த ஞானி. ''இதோ பாரப்பா... மரம் வெட்டுவதனாலேயே உன் வாழ்நாள் வீணாகப் போகின்றதே, இன்னும் கொஞ்சத் தூரம் காட்டிலே முன்னேறிப்போ, ஒரு செம்புச் சுரங்கம் அங்கே இருக்கின்றது. அதிலே ஒரு நாள் வேலை செய்தால் ஒரு வாரத்திற்கு உனக்கு கவலை இருக்காது. தினம் வேலை செய்ய வேண்டி இருக்காது. அங்கே போ'' என்று கூறினார். அவனுக்கு நம்பிக்கை வரவில்லை யோசனை செய்தான். இந்த ஞானி எப்போது பர்த்தாலும் இந்த மரத்தடியின் கீழ் தான் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து இருக்கின்றார். இவருக்கு எப்படித் தெரியும். அங்கே சுரங்கம் இருக்கின்றது என்று நினைத்தான். இருந்தாலும் போய்ப் பார்போம் என்று நினைத்துக் கொண்டு போனான். சிறிது தூரம் போனதும் அவர் சொன்னது போலவே ஒரு செம்புச் சுரங்கம் இருந்தது. இதிலே வேலை செய்ய ஆரம்பித்தான். வாரத்திலே ஒருநாள் வேலை செய்தால் போதும். மற்ற நாட்களில் எல்லாம் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும். குடும்பத்தையும் நன்றாக கவனிக்க முடியும், வருகின்ற விருந்தினர்களையும் நன்றாக உபசரிக்க முடியும். மறுபடியும் அந்த ஞானி அவரைக் கூப்பிட்டார். என்ன இது... இன்னும் விபரம்தெரியாமல் இருக்கின்றாய். இன்னும் முன்னேறிப்போ, அங்கே ஒரு வெள்ளிச்சுரங்கம் இருக்கின்றது. அங்கே நீ ஒரு நாள் வேலை செய்தால் போதும், நீ ஆறு மாதத்திற்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்று சொன்னார். இதையும் அவன் முதலில் நம்பவில்லை. இருந்தாலும் போய்ப் பார்ப்போம் என்று போனான். அங்கே நிஜமாகவே ஒரு வெள்ளிச் சுரங்கம். அதில் ஒரு நாள் வேலை செய்வான், அதைக் கொண்டு ஆறு மாதத்திற்கு அவன் ஆடம்பர வாழ்க்கை நடத்துவான். மறுபடியும் ஒரு நாள் வந்தான். ஞானி பார்த்தார். இன்னும் நீ விபரம் தெரியாமல் இருக்கின்றாய். இன்னும் கொஞ்சம் முன்னேறிப்போ, ஒரு தங்கச் சுரங்கம் உன் கண்ணிலே படும் என்று சொன்னார். ஆசை யாரை விட்டது? அங்கேயும் போனான். கொஞ்ச நாளிலே பெரிய பணக்காரன் ஆகிவிட்டான். செல்வம் நிறைய சேர்ந்து போய் விட்டது. இனிமேல் ஞானியைப் பற்றி நமக்கு என்ன கவலை? என்று இருந்து விட்டான். அது மட்டும் இல்லை அந்த ஞானியே விபரம் தெரியாத ஆள் என்று நினைத்து விட்டான். ஏன் என்றால் இப்படி ஒரு தங்கச்சுரங்கம் இருக்கின்றது என்று தெரிந்தும், அந்த ஆள் கண்ணை மூடிக்கொண்டு மரத்தடியிலே உட்கார்ந்து இருக்கின்றாரே, அவர் எப்படிப்பட்ட ஏமாளியாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். அவரைப் போய்ப் பார்க்கவே இல்லை. ஒரு நாள் ஞானியே இவரைக் கூப்பிட்டார். என்ன இது, இப்படி இருந்துவிட்டாய்.....எனக்கு வயதாகிக் கொண்டே இருக்கின்றதே உனக்காக இனிமேலும் காத்துக்கொண்டு இருக்கமுடியாது. இன்னும் கொஞ்சம் முன்னேறிப்போனால், வைரச்சுரங்கத்தையே பார்க்கலாம். நீ தங்கத்துடனே உன் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றாயே என்றார். அவன் போய் வைரச்சுரங்கத்தைக் கண்டு பிடித்தான்..ரொம்ப நாளாக வரவே இல்லை. ஞானி மரணப்படுக்கையிலே இருந்தார். சொல்லி அனுப்பினார். உடனே வா.... உன்னிடம் கடைசி இரகசியத்தையும் சொல்ல வேண்டியிருக்கின்றது என்று.

வந்தான், அவர் முன்னாடி நின்றான்.

வைரத்தைவிட பெரிதாக என்ன இருந்துவிட முடியும்?

இன்னும் கொஞ்சம் முன்னேறிப் போ என்று சொல்லப் போறீர்களா? என்றான்.

" ஆமாம். இன்னும் கொஞ்சம் முன்னேறிப் போனா அள்ளக் குறையாத ஒரு பொக்கிஷம் இருக்கு "அதைப் பார்க்கலாம்.. வைரச் சுரங்கம் சீக்கிரம் தீர்ந்து போயிடும் என்றார்.

இவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கின்ற நீங்கள் இன்னமும் ஏன் இந்த மரத்தடியிலே உட்கார்ந்திருக்க வேண்டும் என்றான். அந்தப் பொக்கிஷம் எனக்குள் இருக்கின்றது.

அதற்காகத் தான் உன்னைக் கூப்பிட்டேன் என்றார். அவர் சொன்னது மிகப் பெரிய விடயம். அவனாலே புரிந்து கொள்ள முடியவில்லை அந்த சமயத்திலே. அதற்கு பின்பு ஞானி இறந்து விட்டார். இவனுக்கு வயதாகிவிட்டது. ஞானி சொன்னது சரியாக இருக்குமோ என்று அப்போதுதான் தோன்றியது. காட்டுக்குப் போனான். கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அந்தப் பொக்கிஷத்தை அவன் கண்டுபிடித்துவிட்டான். நாங்கள் இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே இது பைத்தியக்காரத் தனமாகத் தெரியலாம் அதனால் இதைப் இப்பொழுது காதிலே போட்டு வைத்துக் கொள்வோம். உபயோகப்படுகின்ற பொழுது உபயோகப்படட்டும். நம்முடைய ஆள் ஒருத்தரைப் பார்த்துக் கேட்டேன். ஏன்பா.. உன்னிடம் அதே மாதிரி ஒரு ஞானி வைரச்சுரங்கம் இருக்கின்ற இடத்திற்கு வழிகாட்டினால் நீ என்ன செய்வாய் என்றேன். முதலிலே வழிகாட்டியவரைத் தீர்த்துக் கட்டுவேன் என்றார். அடப்பாவி ஏன்டா அப்படி? என்றேன். அப்பத் தான் எனக்குப் பின்னாடி இன்னொருத்தருக்கும் அவர் வழிகாட்டாமல் இருப்பார் என்றான்.

# இந்தியா-இலங்கைக்கு இடையில் புரிந்துணர்வு நடவடிக்கைகளுக்கு எதிர்பார்ப்பு



(கொழும்பு)
இந்தியா - இலங்கைக்கு இடையில் உள்ள இருதரப்பு உறவுகளை முன்கொண்டு செல்வதற்கும் புரிந்துணர்வு நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கும் எதிர்பார்ப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர், "நான் எப்போதும் கூறுவதைப் போன்று இந்தியா எமது நட்பு நாடு. அதே போன்று உறவு நாடு.

பிரதமர் நரேந்திர மோடியினால் வழங்கப்பட்ட வாழ்த்திற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் தான் எனக்கு முதன் முதலில் வாழ்த்துத் தெரிவித்த உலகத் தலைவர்" என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஐ)

# புதிய பாராளுமன்ற அமர்வில் பிள்ளையான் கலந்து கொள்வார்

## பிரசாந்தன் அறிவிப்பு

(கொழும்பு)
புதிய நாடாளுமன்ற அமர்வில் சிறையிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொள்வார் எனவும் அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "நடைபெற்று முடிந்த தேர்தல் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இருந்த மக்கள் 2015 நல்லாட்சி தொடக்கம் மிக வேதனையான பாதிப்பு ஏற்பட்டு அபிவிருத்தியிலும் தனித்துவத்திலும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆகவே இந்தமுறை மக்கள் வழங்கியிருக்கும் செய்தியானது கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியும் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும்.

அதனை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிசிரமேற்று சந்திரகாந்தன் தலைமையில் முன்னெடுத்துச் செல்லும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அதிகமான வாக்குகளை வழங்கி 4 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு வந்துள்ளனர்.

எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சிக் கொள்கை சார்ந்தவர்களாக இருந்தாலும் அரசியல் என்பது மக்களுக்காகவே தவிர தாங்கள் சார்ந்த கட்சிக்காகவோ அரசியல் இருப்புக்காகவோ அல்ல என்பதனை வெளிப்படையாகப் புரிந்து கொண்டு பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் ஒரே கூரையின் கீழ் மக்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமிழர்களின் இருப்பினை பாதுகாப்பதற்காக ஒரே கூரையின் கீழ் பயணிக்க வேண்டும்எனதமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சி பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றது.

தடுப்புக் காவலில் இருக்கின்றபடியினால் பாராளுமன்றம் என்ற சிறப்புரிமையின் கீழ் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற பாராளுமன்ற அமர்வுக்கு அவர் செல்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்தப் பாராளுமன்றம் சென்ற பிற்பாடே ஏனைய நடைமுறைகள் முன்னெடுக்கப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# சீனக்கட்டட சர்ச்சை குறித்து சீனத்தூதரகம் விளக்கம்

(கொழும்பு)
அம்பாந்தோட்டையில் "சைனா" என்ற ஆங்கில எழுத்துக்களின் வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் எழுந்த சர்ச்சையை அடுத்து, அது குறித்து சீனத்தூதரகம் விளக்கமளித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் அடுத்தடுத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் சீனாவின் ஆங்கிலப் பதமான CHINA என்ற சொல்லை வெளிப்படுத்தும் வகையில் அதிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்களின் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்பிக்கும் கூகுள் வரைபட புகைப் படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது. அதற்கு சமாந்தரமாக SW என்ற ஆங்கில எழுத்துக்கள் வடிவில் அமைந்த கட்டடங்களின் கூகுள் வரைபட புகைப் படங்களும் பகிரப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதுகுறித்து இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பின்வருமாறு விளக்கமளித்திருக்கின்றது.

"இவ்வரைபடத்தில் காண்பிக்கப்படும் கட்டடங்கள் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்தின் போது CHINA - SLK என்ற எழுத்துக்களைக் வெளிப்படுத்தும் விதமாக சைனா ஹார்பர் என்ஜினீரிங் கம்பனியினால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது. எனினும் பின்னர் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழும கம்பனி மற்றும் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் கம்பனி என்பன அப்பகுதிக்குள் பிரவேசித்ததுடன், வேகமாக அதிகரித்து வந்த துறைமுக வாணிபத்தின் விளைவாக அப்பகுதியை விரிவாக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது.

ஆகையினாலேயே SLK என்பதிலுள்ள LK இன் வடிவம் திரிபடைந்திருக்கிறது. இது அபிவிருத்தி மற்றும் அன்பின் கதையாகும்" என்று சீனத் தூதரகம் குறிப்பிட்டிருக்கிறது. (ஐ-4)




## நல்லூரை நாடி வருகின்றார்

நாரெனும் அன்பு நலமே வளர்ந்திட
நித்தம் நிம்மதி நிலவிட
தீர்வுகள் வந்திட துயர்கள் நீங்கிட
திருவருள் பெற்றிடும் பற்றுடன்
தேர்வடம் பிடிக்க தேரடிக்கு அடியார்கள்
தேடி வருகின்றார் நல்லூரை
ஆர்வமுடன் அடியார் ஆறுமுகன் தேரிழுத்து
ஆறுதலை அமைதியினை வேண்டுகின்றார்

*க. அருமைநாயகம்,*
*குளப்பிட்டி.*

## நல்லையிற் பெருவாழ்வே

இருளணைய நெஞ்சம் கொற்றை
மருளணைய சிந்தை கொண்டதனாலே
பிணக்குதோய் கீழ்வாழ்வே சிதற
துணைக்கென்று வரவேணும்
தரைமேவு காஞ்சி மாநிழலும்
வரை கயிலாயமும் காண்பார் தருசேயே
விரைகடப்பமார் அணை வள்ளிபாக
திரைச் செந்திலிலும்
நல்லையிலும் பெருவாழ்வே

*-ச. சுதந்தரி-*

## மருந்தாக வருவாயே முருகா

மயிலேறி வருவாயே மருள்நீக்கி அருள்வாயே
கரும்பானவனே கதிர்வேலா காயம் வந்துவிடு
தெருவெல்லாம் கொடுமைகள்
தெரிந்துமேன் மௌனம்
திருந்துவாரில்லை திடமான தீர்வைத் தா
வெருண்டவர் மேல் ஆதிக்கம்
விருப்பங்கள் திணித்திடுவார்
உருண்டோட வைத்திடுவார்
உவகையில் நிமிர்வார்
திரண்டசோறு தாங்கிடினும் யார்க்குமே அஞ்சார்
மருந்தாக வந்து மாயங்கள்
போக்கிடுவாய் முருகா.

*மானஷன்,*
*அல்வாய்.*

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

உள்ளத் தூய்மை வாய்மை நாட்டில்
ஒன்றுந் தன்மை யில்லையே
கள்ளங் கபடங் கொள்ளு மீனர்
கரணம் போடல் தொல்லையே
எள்ளும் நகையும் துள்ளும் பகையும்
இவைகள் தானிங் கெல்லையே
அள்ளி யிந்தப் போக்கை நீக்கி
ஆக்கும் நல்லைக் கந்தனே!

*கலாபூஷணம் சந்தக்கவிஞர்.*
*நவ. பாலகோபால்*



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

## 42

கலாநிதி முருகர் குணசிங்கம்

ஆனால் மேற்கண்ட நாடுகளில் அரசுகள் தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாப்பதில் ஈழத்தமிழர்களுக்குப் பல உதவிகளை வழங்கி வருகின்றன.

ஈழத்தமிழர்களும் தமிழ் மொழியை அழிய விடாது காப்பதற்காகத் தம்மால் முடிந்தவரை கடமை ஆற்றி வருகின்றனர். பல்வேறு அமைப்புகளை நிறுவி இளம் தலைமுறையினரிடம் தமது தாய் மொழியைக் கையளிப்பதில் வெற்றி பெற்றுள்ளார்கள்.

அந்த இளம் தலைமுறையினர் தமக்கு அடுத்த தலைமுறையினருக்குத் தமிழ்மொழியைக் கையளிக்க வேண்டிய பொறுப்புள்ளது.

மேற்கண்ட நாடுகளில் சைவக் கோயில்கள், தமிழ்ப் பாடசாலைகள் பரவலாக நிறுவப்பட்டதுபோல் பல நூற்றுக்கணக்கான சமூக நிறுவனங்களும் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

தாம் புலம்பெயர்ந்து வாழும் நாட்டிலும் தமது தாய் நாட்டிலும் சேவைகளை வழங்கக்கூடிய சமூகநல நிறுவனங்கள், கலை பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு பரத நாட்டியம், நாடகம், வீணை, தவில், மிருதங்கம், புல்லாங்குழல் பயிற்றுக் கூடங்கள், அல்லல்படும் தாய்நாட்டுத் தமிழர்களுக்குத் தமது உதவிகளை வழங்கக்கூடிய மறுவாழ்வு அமைப்புகள் போன்றவை உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களை இணைத்து வைத்திருக்கும்.

புதினப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற நிறுவனங்கள் தமது பொருளாதார அடித்தளத்தைக் கட்டி எழுப்புவதற்கான வணிக நிறுவனங்கள் தமது தேச விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் இலட்சியப் போக்குக்கொண்ட பல்வேறு அரசியல் அமைப்புகள் எனப் பல நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் தொடங்கப்பட்டு பல்வேறு வழிவகைகளில் தொண்டு ஆற்றி வருகின்றன.

இதன்மூலம் மேற்கண்ட நாடுகளில் ஈழத்தமிழர்கள் தம்மை ஒரு நிரந்தரமான குடிமக்களாக,சமூகமாக மாற்றிக் கொண்டார்கள் என்பதனையும் நல்ல கட்டமைப்பும் ஒருமைப்பாடும் தனித்துவமும் கொண்ட ஒரு தேசிய இனம் என்பதனையும் தாய் நாட்டோடு இறுக்கமான உறவுகளைப் பேணி வரும் தனித்துவமான இனம் என்பதனையும் தாய் நாட்டின் விடுதலையில் தமது மக்களின் விடியலில் அக்கறை கொண்டவர்கள் என்பதனையும் மிகத் தெளிவாக நிரூபித்து இருக்கின்றார்கள்.

மேற்கண்ட நாடுகளில் ஈழத்தமிழர் தமது முதலாவது தலைமுறையினரின் கல்வியில் காட்டிய அக்கறைக்குப் பன்மடங்கு மேலாகத் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டும் பண்பையும் போக்கையும் கொண்டவர்கள்.

சுமார் 90 விழுக்காடு ஈழத்தமிழர்களின் இரண்டாவது தலைமுறையினர் பல்கலைக்கழகம் சென்று படித்துப் பட்டம் பெற்றவர்களாகவும் அரச, தனியார் நிறுவனங்களில் கௌரவமான தொழில்களைப் பெற்று அதிக வருமானம் பெற்று வாழ்வதைப் பரவலாகக்காண முடிகின்றது.

இதன் பயனாக அவர்கள் ஒரு முன்னேற்றமான முற்போக்கான தன்மை கொண்ட **(Upward Mobility)** இளம் தலைமுறையாகப் பரிணமிக்கின்றார்கள்.

இளம் தலைமுறையினருள் 10 விழுக்காட்டுக்குக் குறைவானவர்களே தமது கல்வியைத் தொடராமல் இடைநிறுத்தியும் நல்ல தொழில் வாய்ப்பைப் பெறாதவர்களாகவும் பல குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் அறிய முடிகிறது.

ஆனால் பெரும்பாலான இளம் தலைமுறையினரின் கல்வி, தொழில் சாதனைகள், அவர்கள் பெற்றோருக்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் இனத்துக்கும் ஒட்டுமொத்தமான ஈழத்தமிழர்களுக்கும் ஈழத்தேசத்திற்கும் மேற்கண்ட நாடுகளில் நற்பெயரையும் நன்மதிப்பையும் கொடுத்துள்ளது என்பதனை யாரும் மறுக்க முடியாது.



கடந்த கால் நூற்றாண்டில் ஈழத் தமிழர்கள் தமது கடும் உழைப்பால் தொழில் வணிக முயற்சிகளால் பொருளாதார நிலைமைகளில் நல்லதொரு அடித்தளத்தை அமைத்து அதன் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றார்கள்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத நாடுகளான சுவிட்சர்லாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளில் சாதாரணத் தொழில் புரியும் ஈழத்தமிழர்கள் அதிக வருமானம் பெறுபவர்களாகவும் வசதியான வீடுகளில் வாழ்க்கையை அனுபவிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உட்பட்ட நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் தொழில்புரியும் சாதாரணமான ஈழத்தமிழர்கள் மிகவும் குறைந்த ஊதியத்தையே பெறுகின்றனர்.

எனவே மிகவும் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளுடன் வாழ்வதையே பரலவாகக் காண முடிகிறது.

புலம்பெயர் ஈழத்தமிழர்களுள் குறிப்பிடத்தக்க தொகையினர் பல்வேறுபட்ட சிறியதும் பெரியதுமான தொழில், வணிக முயற்சிகளில் ஈடுபட்டு வருவதைப் பரவலாகக் காணலாம்.

பிரான்ஸ் நாட்டில் லா சப்பேல் நகரத்தில் செறிந்து வாழும் ஈழத்தமிழர்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு வணிக நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்.

பல உணவகங்கள், சிற்றுண்டி விடுதிகள், சிறியதும் பெரியதுமான சந்தைக் கடைகள், மரக்கறிகள், பழங்கள், வீடியோ கடைகள், தொலைபேசிக் கடைகள், இணையத்தளம், பத்திரிகைக் கடைகள், புத்தகசாலைகள் போன்ற நிறுவனங்கள் பயண ஒழுங்கு நிறுவனங்கள், பணப்பரிமாற்ற வங்கிகள், பல்வேறுபட்ட புடைவைக் கடைகள், நகைக் கடைகள், அலங்காரப் பொருள் கடைகள், முடி அலங்காரக் கடைகள், பூக்கடைகள், இறச்சி, மீன் கடைகள் போன்ற ஒரு சமூகத்திற்குத் தேவையான சகல நிறுவனங்களையும் நடத்தி வருகின்றார்கள்.

தமிழ்த் திரைப்படப் பாடல்களும் பக்திப் பாடல்களும் திரைப்படங்களும் எந்நேரமும் காதுக்கும் கண்களுக்கும் விருந்து அளித்துக்கொண்டே இருக்கின்றன.

சகல கடைகளும் தமிழ் பெயர்கள் பொறிக்கப்பட்ட விலாசப் பலகைகளைத் தாங்கி நிற்பதோடு தமிழ் மொழியில் பல்வேறு துறைசார்ந்த விளம்பரங்களையும் தாங்கி நிற்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ்த் தேசத்தின் ஒப்பற்ற தலைவனாக அவர்களால் மதிக்கப்படும் தேசியத் தலைவரின் பெரியதும் சிறியதுமான படம் ஒட்டாத கடைகளைக் காண்பது அரிது என்றே சொல்லலாம்.

குறிப்பாக ஈழத் தமிழரின் ஒரு பண்பாட்டு மையமாக ஒரு சிறிய தமிழ் ஈழம் என்ற உணர்வை சகல மட்டத்தினருக்கும் ஏற்படுத்திப் பாரிய சக்தியைக் கொடுக்கின்றது.

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய மேற்குறிப்பிட்ட நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்கள் பல்வேறு நகரங்களில் பரந்து வாழ்வதால் பாரிசில் லா சப்பேலில் காணப்படுவதுபோல் ஒரு சமூக நிலைமை அவ்வளவாகக் காண முடியாத நிலை உள்ளது.

லா சப்பேலில் காணப்படும் தமிழ் ஈழம் என்ற உணர்வை கோலாலம்பூரில், பிறிக்பீல்டிங் **(Brickfield)** உள்ள சின்ன யாழ்ப்பாணம் **(Little Jaffna)** என்று அழைக்கப்படும் நகரமும் ஏற்படுத்துவதை உணர முடிகின்றது.

இவ்விரு நகரங்களும் ஈழத்தமிழர்களின் இறுக்கமான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு சமூக வலைப்பின்னல் மையமாகக் காணப்படுகின்றன.

ஆனால் அவர்கள் வாழும் நகரங்களில் பாரிஸ் ஸ்ரீ லா சப்பேல் நகரில் உள்ளது போலவே சகல வகையான வணிக நிலையங்களையும் உருவாக்கி இருக்கின்றார்கள்.

அவை தமிழர்களின் இன, மொழி, தேசிய அடையாள மையங்களாகவே காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க அளவில் ஈழத்தமிழர்கள் பாரிய பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்குச் சொந்தக்காரர்களாக உள்ளார்கள்.

பல கோடிக்கணக்கான பெறுமதிகளைக் கொண்ட அவைகள் தொடர்ந்து வெற்றிகரமாக வீறுநடை போட்டு வருவதையும் காண முடிகின்றது.

தமது தாய் நாட்டின் அரசியல் தலைவிதியை மாற்றுவதற்கும் அம்மக்களின் அவலங்களைப் போக்குவதற்கும் பல்வேறுபட்ட அரசியல் அமைப்புகளும் அதன் அமைப்பாளர்களும் தமது தொடர்ச்சியான ஜனநாயக வழிப் போராட்டங்களையும் ஆர்பாட்டங்களையும் செயல் விளக்கக் கூட்டங்கள், ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகள், மகா நாடுகள் போன்றவற்றையும் தொடர்ந்து நடத்தி தமிழ் ஈழ விடுதலையை விரைவுபடுத்தும் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

2009 இல் ஈழ விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்படுவதற்கு முன்னர் சகல அமைப்புகளும் மிக ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் தியாக உணர்வோடும் போராட்டத்தின் முன்னெடுப்பிற்காகவும் வெற்றிக்காகவும் இராப்பகலாகத் தமது பங்களிப்புக்களைச் செய்து வந்துள்ளனர்.

ஆனால் 2009 இற்குப் பின்னர் அரசியல் அமைப்புகள் பல்வேறுபட்ட பின்னடைவுகளைச் சந்தித்து இருப்பதையே காண முடிகிறது.

இதற்குப் பல்வேறு சமூக அரசியல் காரணங்கள் பின்புலத்தில் இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

(தொடரும்)

# அங்கொட லொக்கா குழுவிற்கு 50 கோடி சொத்துக்கள்

# தீவிர விசாரணையில் வெளிவந்த உண்மைகள்





**(கொழும்பு)**

**அங்கொட லொக்கா சட்டவிரோத செயற்பாடுகள் ஊடாக சுமார் 50 கோடி ரூபா வரை பணம், சொத்துக்களைச் சேர்த்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அது தொடர்பில் கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

(கொழும்பு)

இந்தியாவில் இறந்து விட்டதாக நம்பப்படும், பிரபல பாதாள உலகக் குழு தலைவன் அங்கொட லொக்காவின் குழுவினருக்கு சொந்தமாக மேல் மாகாணத்துக்குள் மட்டும் 928 பேர்ச்சஸ் காணிகள் இருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பலாத்காரமாகவும் போலி உறுதிகள் ஊடாகவும் அக்குழு இந்த காணிகளைக் கைப்பற்றியுள்ளதாக நம்பப்படும் நிலையில், அது தொடர்பில் மேல் மாகாணத்தின் தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவூடாக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

"இதுவரையில் அங்கொட லொக்கா தொடர்பிலான விசாரணைகளில் அவரது குழு சட்டவிரோதமாக கைப்பற்றிக் கொண்டுள்ள 928 பேர்ச்சஸ் காணிகள் தொடர்பில் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் அவர் களனி முல்லை மற்றும் அம்பத்தலே பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வுகளையும் முன்னெடுத்துள்ளார். அவரது குழு ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ள அந்த சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட 4 ட்ரக் வண்டிகள், மணலை கரைக்குக் கொண்டு வர பயன்படுத்தப்பட்டுள்ள வள்ளங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அங்கொட லொக்காவின் குழுவினரால் எவரது காணியேனும் பலாத்காரமாகவோ அல்லது போலி உறுதிகள் ஊடாகவோ கைப்பற்றப்பட்டிருக்குமானால் அவர்கள் மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் லலித் அபேசேகரவிடம் 071 859 2279 எனும் இலக்கத்துக்கு அழைத்து முறையிட முடியும் எனவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (2-4)

# கடல் கொந்தளிப்பு மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில நாட்களுக்கு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு திசையிலிருந்து வீசக் கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசந்துறையிலிருந்து மன்னார் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச்சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆபத்தானது என மீனவர்கள் அறிவுறுத்தப்படுவதோடு, கடலில் பயணம் செய்வோர் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# ஏமாற்றப்பட்டார் மைத்திரி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு எவ்வித அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவில்லை.

மேலும் பல அரசாங்கங்களின் கீழ், அமைச்சுப் பதவிகளை வகித்த அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, டிலான் பெரேரா ஆகியோருக்கும் இராஜாங்க அமைச்சர்களாக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ, எஸ்.பி. திஸாநாயக்க, சந்திம வீரக்கொடி ஆகியோருக்கும் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் எவ்வித அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவில்லை. (ஜ-4)

# தமிழர்களுக்கு எதிராக அநீதி நடைபெற்றால் அதற்கு எதிரான குரலை நாம் வழங்குவோம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பலப்படுத்தும் வகையில் அனைத்து தமிழ்த் தேசிய ஆதரவாளர்களையும் ஒன்றிணைத்து முன்கொண்டு செல்லவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தலைவருமான இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். மட்டு.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்தியை கூறி மக்களிடம் வாக்குப் பெற்றவர்கள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை வழங்கி அமைச்சுகளைப்பெற்று மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

எனக்கு வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் அனைவருக்கும் பொதுவான நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படுவேன். வருங்காலத்தில் தமிழ் தேசியத்தினை கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமான கடமையாக இருக்கும்.

தமிழரசுக்கட்சியை மீள கட்டியெழுப்பி வெற்றியை நோக்கி கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளேன். கட்சியின் மத்திய குழு எடுக்கும் தீர்மானங்களை கட்டியெழுப்புவது எனது கடமையாக இருக்கும்.

கிழக்கினை மீட்கப்போகின்றோம் எனவும் பிரதேசவாதங்களையும் பேசி வாக்கு கேட்டவர்கள் அனைவரும் அமைச்சு பதவிகளை இந்த அரசாங்கத்திடம் கோரவேண்டும். அதன்மூலம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று அதனை விட தமிழ் தேசியத்தினை புறக்கணித்து அபிவிருத்திக்காக வாக்களித்த மக்கள் அவர்களின் காரியாலயத்தினை முற்றுகையிட்டு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தங்களை வழங்க வேண்டும்.

வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் தமிழர்களின் பிரதிநிதித்துவம் அங்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம் அம்பாறைக்கு வழங்கப்பட்டதை நான் வரவேற்கின்றேன். எதிர்காலத்தில் கல்முனை பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை பூரணமாகவழங்குவதற்கு தேவையான அழுத்தங்களை அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக வழங்குவேன் என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சீனப் பாணியிலான ஆட்சிக்கு அடித்தளம்?

## மங்கள சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் எதிர்ப்பையும் மீறி நீதியமைச்சராக அலி சப்ரி நியமிக்கப்பட்டமைக்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைப் பாராட்டியிருக்கும் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, பாதுகாப்பு அமைச்சின் கீழ் "உள்நாட்டு அலுவல்கள்" என்றவிடயதானம் கொண்டு வரப்பட்டமை சீனப்பாணியிலான "கண்காணிப்பு மிகுந்த" அரசாங்கமொன்றை அமைப்பதற்கு அடித்தளமிடப்படுவதையே காண்பிக்கின்றது என்றும் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நேற்று புதன்கிழமை கண்டியிலுள்ள தலதா மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டது.

அதன்படி நீதியமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நியமிக்கப்பட்டிருப்பதுடன், இராஜாங்க அமைச்சுக்களின் கீழ் பல்வேறு புதிய விடயதானங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் மங்கள சமரவீர செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது,

பௌத்த பிக்குகளின் எதிர்ப்பையும் மீறி நீதியமைச்சராக அலி சப்ரியை நியமித்தமைக்காக பிரதமரைப் பாராட்டுகின்றேன்.

எஞ்சிய அமைச்சரவை நியமனங்கள் அத்தனை வரவேற்கத்தக்கவையாக இல்லை என்பதுடன் பெரும்பாலும் இராஜாங்க அமைச்சர்களுக்குப் பொறுப்பாக ஒதுக்கப்பட்டுள்ள விடயதானங்கள் பெரும் நகைப்பிற்குரியதாக இருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாதுகாப்பு அமைச்சிற்குக் கீழான விடயதானங்களில் ஒன்றாக "உள்நாட்டு அலுவல்களை" உள்ளடக்கி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலானது, சீனப்பாணியிலான கண்காணிப்பு மிகுந்த அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முதல் அடித்தளமாகவே அமைந்திருக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# புளியம் பழம் பறிக்கச் சென்ற ஒன்பது பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

திருகோணமலை - மஹதிவுல்வெவ பகுதியில் காட்டு புளியம்பழம் பறிக்கச் சென்ற ஒன்பது பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக வன இலாகா அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் காட்டுப் பகுதிக்குச் சென்று மரக்கிளைகளை வெட்டி காட்டு புளியம்பழங்கள் பறித்து கொண்டிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று பதிவு செய்யப்பட்டதாகவும் வன இலாகா அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

மஹதிவுல்வெவ குளத்துக்கு மேலே உள்ள காட்டுப் பகுதிக்கு செல்ல வேண்டாம் என பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த அப்பகுதிக்கு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் தாம் வருடத்துக்கு ஒருமுறை காட்டு பழங்களை பறித்து தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதாக, காட்டுப்பகுதிக்கோ அல்லது மரங்களுக்கோ சேதம் ஏற்படாத வகையில் புளியம் பழங்களை பறித்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அனுமதிப்பத்திரம் இல்லாமல் காட்டுப் பகுதிக்குச் சென்ற குறித்த ஒன்பது சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வன இலாகா அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-4)

# முக்கிய அமைச்சுக்கள் புதிய அமைச்சரவையில் இல்லை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள் அமைச்சு, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் புதிய அமைச்சரவையில் நீக்கப்பட்டுள்ளன.

கல்வி மறுசீரமைப்பு பரீட்சைகள் மற்றும் பல்கலைக்கழக தொலைநோக்கு கல்வி என்ற இராஜாங்க அமைச்சுக்கு வர்த்தமானி வெளியிடப்பட்டும் அந்த இராஜாங்க அமைச்சு பதவி எவருக்கும் இதுவரையில் வழங்கப்பட வில்லை.

புதிய அமைச்சரவையில் புதிய இராஜாங்க அமைச்சுக்கள் பல அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட அமைச்சுக்கள் பல நீக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஆகிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் புதிய அரசாங்கத்தில் நீக்கப்பட்டுள்ளன. (ஐ-4)



# நிஷாந்த சில்வாவுக்கு சர்வதேச பிடியாணை

(கொழும்பு)

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவை காணும் இடத்தில் கைது செய்யும் வகையிலான பிடியாணை சர்வதேச பொலிஸார் ஊடாக பிறப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச இரகசியங்களை வெளியிட்டமை, வெளிநாட்டு தூதரங்களுடன் தொடர்புகளை கொண்டிருந்தமை, பொய் சாட்சியங்களை உருவாக்கியமை, அரசுக்கு தெரியாமல் நாட்டை விட்டு தப்பிச் சென்றமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் நிஷாந்த சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

இதனை தவிர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோர் வெள்ளை வான் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என பிரான்ஸ் நாட்டை சேர்ந்த தமிழ் பெண்ணான ஜெயனி தியாகராஜாவிடம் கூறியதாகவும் நிஷாந்த சில்வாவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் இருந்து சுவிட்சர்லாந்து சென்ற நிஷாந்த சில்வா அந்நாட்டில் அரசியல் தஞ்சம் பெற்று அங்கு வசித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# ஆன்மீகம்

## கொழுந்து விட்டு எரியட்டும் ஆர்வத் தீ!

(நேற்றைய தொடர்ச்சி)

இருட்டையும் பகல்போல ஆக்கிக் கொண்டு இன்று உலகம் இயங்கி வருகிறது. காரணம் ஒளி உமிழும் மின்சார பல்புகள். இந்த பல்பை உருவாக்கியவர் தோமஸ் ஆல்வா எடிசன். மின்சார விளக்கை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவல் அவருள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்தது. பலமுறை முயன்றும் அவர் முயற்சி வெற்றி பெறாத போதிலும் எரியும் பல்பை கண்டு பிடிக்கும் அவருடைய ஆர்வத்தீ எரிந்துகொண்டே இருந்தது, அணையவில்லை. முடிவில் ஒருநாள் அவர் முயற்சி வெற்றி பெற்றது. நண்பர்கள் மகிழ்ந்து அவரின் ஆய்வுக் கூடத்திலேயே அவருக்கு ஒரு பாராட்டு விழா ஏற்பாடு செய்து அதிலேயே அவர் கண்டு பிடித்த பல்பின் அறிமுக விழாவும் நடத்த முடிவு செய்தனர். ஆய்வுக் கூடத்திற்குத் தான் கண்டுபிடித்த பல்பை எடுத்துவர தன் உதவியாளரைப் பணித்தார் எடிசன்.

நண்பர்களும், எடிசனும் விழாத் தொடக்க மகிழ்வில் இருந்த அந்த நேரம் உதவியாளர் மாடிப்படி ஏறி ஆய்வுக்கூடத்திற்கு வரும்போது கால் இடறி விழுந்தார். அவர் கையில் இருந்த பல்ப் கீழே விழுந்து உடைந்தது. பதறிப்போய் விட்டனர் நண்பர்கள். தோமஸ் அல்வா எடிசனோ சற்றும் கலங்காது, “சற்று நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள். இன்னொரு பல்பை உருவாக்கி எடுத்து வருகிறேன்” என்றார். அப்படியே சற்று நேரத்தில் இன்னொரு பல்பையும் உருவாக்கி விட்டார். ‘கொழுந்து விட்டெரியும் ஆர்வம்’ என்பது இதுதானே! கன்னியா குமரியில் கடல் இடையே விளங்கும் விவேகானந்தர் பாறையைக் காண விழிகள் இரண்டு போதுமா? அனைவரையும் கவரும் அற்புதமான சுற்றுலா மையமாக அந்த விவேகானந்தர் பாறை தற்போது விளங்குகின்றது. ஆனால், அதன் ஆரம்பக் கதை என்ன தெரியுமா?

கன்னியாகுமரிக்குச் சென்ற விவேகானந்தர் கடற்கரையில் நின்றபடி அங்குள்ள காட்சிகளை ரசித்தார். அப்போது சற்றுத் தூரத்தில் அலைகள் மோதும் அந்த கருங்கல் பாறை மேட்டைக் கண்டு மகிழ்ந்தார். அதில் போய் அமர்ந்து தியானம் புரிய ஆசைப்பட்டார். அங்கிருந்த படகோட்டியிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். ‘அந்த பாறைக்கு அழைத்துச் செல்கிறேன்... இவ்வளவு பணம் தர வேண்டும்’ என்றார் படகோட்டி. விவேகானந்தரிடமோ காசு இல்லை. எனவே படகோட்டி அழைத்துச் செல்ல இயலாது என்றான். ஆனால், பாறைக்குச் சென்று தவம் இயற்றித் திரும்ப வேண்டும் என்ற தணியாத ஆவல் கொழுந்து விட்டெரிந்ததால் விவேகானந்தர் கடலில் குதித்தார்! நீந்தினார்! பாறையை அடைந்தார்! தவம் செய்தார்! அன்று படகோட்டிக்குத் தர அவரிடம் காசு இல்லை. இன்று அவரால் பல படகோட்டிகளுக்கு காசு வந்து கொண்டிருக்கிறது.

தங்கு தடையின்றி பொங்கி வரும் ஆர்வமே செயல்களை வெற்றிகரமாக முடித்து வைக்கும். இராமாயணத்தில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு காட்சி!

எல்லோருமே கேள்விப்பட்ட கம்பனின் ஒரு கவிதை வரி! ‘எடுத்தது கண்டார்! இற்றது கேட்டார்!’ சீதையைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் பல்லாயிரம் பேர் சேர்ந்தால் தான் தூக்க முடியும் என்ற வலிமை வாய்ந்த வில்லை தனி ஒருவர் தூக்கி நாண் ஏற்ற வேண்டும் என்பது நிபந்தனை! இராமர் விநாடியில் அச்செயலை செய்து முடித்தார். அவர் வில்லை முறிப்பார் என அனைவருமே ஏற்கனவே முடிவு செய்துவிட்டனர் என்கிறான் கம்பன். ஏன் தெரியுமா? வில்லை வளைப்பதற்கு அவர் எப்படி எழுந்தார் தெரியுமா? இதோ பாடல், படித்துப் பாருங்கள்.

“பொழிந்த நெய் ஆகுதி வாய் வழி பொங்கி எழுந்த கொடுங்கனல் என்ன எழுந்தான்! ‘அழிந்தது வில்’ என அமரர்கள் ஆர்த்தனர்! கரை கடந்த உற்சாகத்தோடு காரியத்தில் இறங்கினால் கட்டாயம் வெற்றிதான் என்று புரிந்து கொள்வோம்!

# செய்தித்துளிகள்

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் 162 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் புதிதாக 162 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 48 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய 114 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இதுவரையிலான காலப்பகுதியில் மொத்தம் ஆயிரத்து 842 முறைப்பாடுகள், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 30 அடி பள்ளத்தில் வீழ்ந்த ஜீப்

(கொழும்பு)

பதுளை பொலிஸ் பிரிவுக்கு சொந்தமான பொலிஸ் ஜீப்வண்டி பதுளையில் உள்ள கண்டகொலா பகுதியில் சுமார் 30 அடி செங்குத்துப்பாதையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வாகனத்தில் பயணித்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## 227 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 227 இலங்கைப் பிரஜைகள் விசேட விமானங்களில் நேற்று நாடு திரும்பியுள்ளனர். இதன்படி டோஹாவிலிருந்து 13 பேரும், லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து 107 பேரும் இங்கிலாந்தில் தங்கியிருந்த 107 பேரும் இவ்வாறு வருகை தந்துள்ளனர். வருகை தந்த அனைவருக்கும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 | 200 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 |
| கோவா | 160 | 130 | 130 | 150 |
| கரட் | 120 | 150 | 160 | 150 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 60 | 70 | 60 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | -- | 120 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 360 | 300 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 260 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 80 | 50 | 50 |



# சிறுவர் அரங்கம்

## முட்டாள்களிடம் எப்படி பேசுவது?



அக்பர் ஒருநாள் பீர்பாலிடம் பேசிக் கொண்டிருக்கும் போது முட்டாள்களிடம் பேசுவது? எப்படி என்று கேட்டார்.

திடீரென்று அக்பர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பார் என்று எதிர்பார்க்காத பீர்பால், அரசே, இதற்கான பதிலை நாளைக்குக் கூறுகிறேன் என்றார்.

மறுநாள் காலை பீர்பால் டில்லிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று ஒருவனிடம் நான் சொல்வது போல் செய்தால் நூறு வெள்ளிக்காசுகள் தருகிறேன் என்றார்.

அவனும் சரி என்றான். உன்னை நான் இப்போது மன்னரின் அரண்மனைக்கு அழைத்துச் சென்று மன்னரிடம் அறிமுகம் செய்து வைப்பேன்.

உன்னிடம் மன்னர் சில கேள்விகளைக் கேட்பார். மன்னர் என்ன கேள்விகள் கேட்டாலும் நீ மௌனமாகவே நின்று கொண்டிருக்க வேண்டும் என்றார். இருவரும் மன்னரைப் பார்க்கப் புறப்பட்டனர்.

பீர்பால் மன்னரிடம்அவனை அழைத்துச் சென்று அரசே இவன் என் உறவினன், படித்தவன், உலக அறிவு மிக்கவன்.

தாங்கள் என்ன கேள்விகள் கேட்டாலும் இவனால் உடனடியாகப் பதில் கூற முடியும் என்று கூறி அவனை மன்னரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

முட்டாள்களிடம் சில சமயம் பேச நேரிட்டால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவனிடம் கேட்டார்.

மன்னர் கேட்ட கேள்விக்கு பதில் ஒன்றும் பேசாது பீர்பால் சொன்னபடி அவன் மௌனமாக நின்றிருந்தான்.

மன்னர் பலமுறை கேட்டும் அவன் பதில் கூறாது வாய்மூடி மௌனமாகவே இருந்தான்.

பீர்பாலிடம், என்ன உங்கள் உறவினர் நான் பலமுறை கேட்டும் இதற்குப் பதில் கூறாது மௌனம் சாதிக்கிறானே. நீங்கள் கூறியபடி இவன் அறிவாளியாக இருப்பான் என்று தெரியவில்லையே என்றார்.

உடனே பீர்பால், அரசே, தாங்கள் கேட்ட கேள்விக்குத் தான் பதில் கூறி விட்டானே என்றார்.

அக்பர், நான் கேட்ட கேள்விக்கு எங்கே பதில் கூறினான். மௌனமாகவே நின்று கொண்டிருக்கிறான் என்றார்.

அதற்கு பீர்பால் சில சமயம் முட்டாள்களிடம் பேச நேரிட்டால் மௌனமாக இருக்க வேண்டும் என்பதை தான் பேசாது வாய்மூடி மௌனமாக தெரிவிக்கிறான் என்றார்.

முட்டாள்களுக்கு உதாரணமாக தன்னைப் பற்றி அல்லது எதனைப் பற்றி அவர்களிடம் பேசினாலும் அவர்களால் தக்க பதில் கூற முடியாது.

ஆகையினால் அவர்களிடம் பேசாமல் இருப்பதே சிறந்ததாகும் என்பதை உணர்த்திய பீர்பாலின் அறிவைப் புகழ்ந்து பாராட்டினார் அக்பர்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்




இலங்கையை நோக்கி சோழர் படை

பொதுவாக, பிற்கால சோழ மன்னர்கள் இராஜகேசரிவர்மன் அல்லது பரகேசரி வர்மன் என்கிற விருதுப்பெயர்களை தங்கள் பெயருக்கு முன்னால் இணைத்துக் கொள்வார்கள்.

ஒரு சோழ மன்னர் இராஜகேசரி என்ற விருதுப்பெயர் கொண்டால் அடுத்த மன்னர் பரகேசரி என்று அழைக்கப்படுவார். இதில் ஒரு தெளிவான முறை பின்பற்றப்பட்டது.

தந்தை, இராஜகேசரி என்று பெயர் வைத்துக் கொண்டால், மகன் பரகேசரி என்று பாராட்டப்படுவார். இதன்படி, ராஜராஜனின் விருதுப் பெயர், இராஜகேசரி.

இதன் அர்த்தம், அரசர்களுள் சிங்கம் போன்றவன். பரகேசரி என்றால் பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன் என்று பொருளாகும்.

போர்களில் தொடர்ந்து வெற்றி கண்டுவந்த ராஜராஜன் தன்னை மக்களின் தலைவன் என்று கூறுவதற்காக ஜனநாதன் என்கிற ஒரு அடைமொழியை வைத்துக் கொண்டார்.

இந்திரசாமணன், ராஜ சர்வக்ஞன் என்னும் புலி என்கிற விருதுப் பெயர் உண்டு. இந்திரனுக்குச் சமனான ராஜராஜன் அனைத்துக் கலைகளும் அறிந்த மாமேதை., அரசர்களுக்குள் புலி போன்றவர் என்று அதற்கு அர்த்தம்.

இந்த வீரம்தான் சோழர்களின் அடையாளம். குறிப்பாக ராஜராஜன் ஆட்சி செய்த காலத்தில் அவரோடு ஒப்பிடத் தகுந்த மன்னன் என்று யாரும் கிடையாது.

கர்நாடகாவிலிருந்து வந்த களப்பிரர்களால் சோழர்களின் ஆட்சி பல நூற்றாண்டுகளுக்கு எழ முடியாமல் போனதால் கன்னடப் பகுதியையும் ஒரு கை பார்த்து விட வேண்டும் என்பது ராஜராஜனின் நீண்டநாள் ஆசை.

வேங்கி (ஆந்திரா), கன்னடப் பகுதிகள் அனைத்தையும் வளைத்துப் போடுவதற்கு ஒரு பெரும் வியூகம் தயார் செய்யச் சொன்னார்.

ராஜேந்திரனும் படைத் தளபதிகளும் இரவு பகலாகப் பாடுபட்டு ஒரு பெரிய திட்டத்துடன் ராஜராஜனிடம் வந்தார்கள்.

இவை அத்தனையையும் கைப்பற்றி விட்டால் அடுத்தது இலங்கை மட்டும்தான் பாக்கி என்று எண்ணினார் ராஜராஜ சோழன்.

ஒரு பெரிய கனவுடன் தஞ்சாவூரைத் தாண்டி சோழர்படை கிளம்பிச் சென்றது. (தொடரும்)

பொய் சொல்பவன் அதில் தனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று வருந்துகிறான். பொய் சொல்வதற்கு முன்பு பிறரை வஞ்சிக்கத் திட்டம் தீட்டுகிறான்.

– மகாவீரர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்

தேர்தல் முடிந்து விட்டது. எங்கள் பணி நிறைவடைந்தாயிற்று என்றிருந்தால், மீண்டும் நாம் படுகுழி நோக்கியே விழ வேண்டிவரும்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றவர்கள் தமிழ் மக்களுக்காகத் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிப்பார்கள் என்று நீங்கள் நினைத்தால் அதைவிட்ட கேடு வேறு எதுவுமாக இருக்க மாட்டாது.

இதைநாம் கூறும்போது, அப்படியானால் நாங்கள் என்னதான் செய்வது என்று நீங்கள் கேட்கலாம்.

இங்குதான் தமிழ் மக்களாகிய நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆம் தேர்தல் முடிந்து விட்டது. நாம் யாரை ஆதரித்தோமோ அவர்கள் வென்று விட்டார்கள் என்று திருப்தியடைந்தால், அதனால் ஏற்படப் போகும் பாதகம் கொஞ்சமாக இருக்காது.

எனது கட்சி வெற்றி பெற்று விட்டது. நான் ஆதரித்தவருக்குப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்து விட்டது. யாரைத் தோற்கடிக்க வேண்டுமென்று நினைத்தோமோ அவர் தோற்றுவிட்டார். அல்லது நாம் தோற்கடிக்க வேண்டுமென்று நினைத்தவர் வென்றுவிட்டார். அவருக்கு எதிராகச் செயற்படுவதுதான் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கான எமது வேலைத்திட்டம் என்றெல்லாம் நாம் நினைப்போமாக இருந்தால்,

நாம் யாரை ஆதரித்தோமோ; யாரை பாராளுமன்றத்துக்கு அனுப்பினோமோ அவர்களே நம் இனத்துக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்து விடுவர்.

ஆக, நடைபெற்ற தேர்தலின்போது யாரை ஆதரிப்பது நல்லது என்று நினைத்து செயற்பட்டோமோ அத்தகையவர்கள் தமது பாராளுமன்றப் பதவிக்காலத்தில் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதைக் கண்காணித்து அவர்கள் விடுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்ட நாம் தயாராக இருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக நம் தமிழ் இளைஞர்கள் இது விடயத்தில் விழிப்பாக இருந்தால் மட்டுமே நம் இனம் உய்வு பெற முடியும்.

அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே! நீங்கள் அரசியல் கட்சிச் சார்புடையவர்களாக ஒருபோதும் இருக்காதீர்கள். தமிழ் மக்களுக்கான – தமிழ் இனத்துக்கான மிகப் பெரும் பலமாக இருங்கள்.

தமிழ் மக்களுக்காக யார் விசுவாசமாகச் செயற்படுகிறார்களோ அவர்களைத் தேர்தலில் ஆதரிப்பது அவர்களைக் கொண்டு எமது உரிமையை வென்றெடுப்பது என்பதாக நம் காரியம் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து நீங்கள் கட்சி சார்ந்தீர்களாயின் உங்கள் கட்சி செய்வதெல்லாம் சரி என்ற நிலைப்பாட்டுக்கு வந்து விடுவீர்கள்.

இங்குதான் கட்சி அரசியல் மேலெழுகிறது. ஆகையால் தமிழினப் பற்றோடு இருங்கள். சரி பிழை என்பன பட்டவர்த்தனமாகத் தெரியவரும்.

# அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து தரப்புடனும் கலந்துரையாட வேண்டும்

## முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய

(கொழும்பு)

அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பை நாட்டு மக்கள் வழங்கிய ஆணையின் ஊடாக அரசாங்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

எனினும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய விரிவானதொரு கலந்துரையாடல் செயன்முறையைப் பின்பற்றுவதன் ஊடாகவே அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

2020 ஓகஸ்ட்5 பொதுத் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதற்கான ஆணையை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போது, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதற்காகத் தமக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத்தருமாறு பொதுஜன பெரமுன வேட்பாளர்கள் பலரும் பகிரங்கமாகவே வலியுறுத்தியிருந்தனர். தற்போது அரசாங்கம் முன்னர் எதிர்பார்த்ததைப் போன்றே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் தகவல் அறியும் உரிமைச்சட்டம், சுயாதீன ஆணைக் குழுக் களின் உருவாக்கம் உள் ளிட்ட பல்வேறு ஜனநாயக தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படுமா அல்லது மாற்றியமைக்கப்படுமா என்றவாறான கரிசனைகள் அதிகரித்துள்ளன.

இந் நிலையிலேயே முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் நாட்டு மக்களால் வழங்கப்பட்டிருக்கும் ஆணை, அரசியலமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கும் புதிய வரைபுகளைக் கொண்டு வருவதற்கும் அரசாங்கத்திற்கு வாய்ப்பை வழங்குகின்றது. எனினும் அவ்வாறு ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இதனுடன்தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்படுவது மிகவும் அவசியமாகும். எனவே அரசியலமைப் புத் திருத்த செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் அதற்காக விரிவான தொரு கலந்துரையாடல்செயன்முறை பின்பற்றப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கின்றார். (ம-3)

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு

# பெண் உட்பட 8 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் நள்ளிரவு வேளையில் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி 16 பவுண் நகைகளை கொள்ளையடித்த குற்றத்தில் பெண் உட்பட எட்டு சந்தேக நபர்களை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பகுதியில் கடந்த மாதம் 21ம் திகதி நள்ளிரவு வீடு ஒன்றுக்குள் புகுந்த மர்மக் கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்களை வாளினைக் காட்டி அச்சுறுத்தி வீட்டில் இருந்த 16 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மற்றும் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற் கொண்டு வந்தனர். யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நவாலி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை கைது செய்து விசாரணை செய்தபோது அவரிடம் இருந்து 2 கிராம் கெரோயின் போதைப் பொருளை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த சந்தேக நபரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மனைவியை சந்தேகப்பட்டால் பாதி வாழ்வு நட்டமாகிறது. தாயை சந்தேகப்பட்டால் அவனின் முழுவாழ்வும் நட்டமாகிறது. -கோச்**


## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** புளிதறித்த புளியங்குளம் கிராமம், செட்டிகுளம் கிராமம், பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பூவரசங் குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக் கழகம், வவுனியா பல்கலைக்கழகம், ஆண்டியப்புளியங்குளம், கற்கடந்தகுளம், மதவுவைத்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### கூட்டு வழிபாடு செய்யுங்கள்



❖ உண்மை என்பது ஒன்றே ஒன்று மட்டுமே. இரண்டு என்றால் அது உண்மையில்லை என்று தான் பொருள்.

❖ கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றால் நமக்குள்ளும் இருக்கிறார் என்பதும் உண்மையே. அப்படி இருக்கும்போது நாம் ஏன் வெளியில் அவரைத் தேடி அலைய வேண்டும்?

❖ குளத்தில் நிலவின் பிம்பம் தெரிவது போல, இதயக்குளத்தில் கடவுளின் பிம்பத்தைக் காண முடியும்.

❖ பக்தன் கடவுளின் அன்பைப் பெற ஏங்கித் திரிவது போல, கடவுளும் பக்தனின் அன்புக்காக ஏங்குகிறார்.

❖ நீங்கள் யார் என்று மட்டும் சிந்தியுங்கள். மற்றவர்கள் யார் என்றும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் சிந்திப்பதால் பயனில்லை.

❖ பக்தர்கள் மன ஒருமையுடன் வழிபடும்போது கடவுளின் இதயம் உருகி விடும். அதனால், கூட்டு வழிபாட்டில் விருப்பத்துடன் கலந்து கொள்ளுங்கள்.

❖ வேலையைச் செய்யுங்கள். பிரார்த்தனையில் ஈடுபடுங்கள். உங்களை கடவுளிடம் அர்ப்பணித்து விடுங்கள்.

# யாழ்.கிரிக்கெட் சம்பியன்- 2020 ஓல்ட்கோல்ஸ் அணி 2-வது சுற்றுக்கு தகுதி



யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020 தொடரின் முதலாவது சுற்றில் ஓல்ட்கோல்ஸ் அணி ஜொலிஸ்ரார் அணியை 214 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் பிரியலக்ஸன் அதிகபட்சமாக 147 ஓட்டங்களையும் சிறிகுகன் 98 ஓட்டங்களையும் ஜிந்துஜன் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் மாதவரூபன் 14 ஓட்டங்களையும் கஜிவன் 13 ஓட்டங்களும் மதுஷன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டியில் ஜொலிஸ்ரார் அணியின் ஜனார்த்தனன் 3 விக்கெட்டுக்களையும் கிருசோபன் 2 விக்கெட்டுக்களையும் பிரசன்னா தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

403 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 31.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

போட்டியில் ஜனார்த்தனன் 48 ஓட்டங்களையும் கல்கோகன் 35 ஓட்டங்களையும் வாமணன் 30 ஓட்டங்களையும் பிரசன்னா 17 ஓட்டங்களையும் கிரிஷாந் 14 ஓட்டங்களையும் அருண்குமார் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பில் சிறிகுகன் 4 விக்கெட்டுக்களையும் ஜிந்துஜன், நிரோஷன் 2 விக்கெட்டுக்களையும் பிரியலக்ஸன், நிலக்ஸன் ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியில் வெற்றி பெற்ற ஓல்ட்கோல்ஸ் அணி 2 ஆவது சுற்றில் டிறைற்றோன் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## யாழ்.கிரிக்கெட் சம்பியன் - 2020 கிறாஸ்கொப்பர்ஸ் 2 ஆவது சுற்றுக்கு தகுதி

யாழ். கிரிக்கெட் சம்பியன் 2020 தொடருக்கான முதலாவது சுற்றின் 5 ஆவது போட்டி கடந்த 26.07.2020 இல் மகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது கிறாஸ் கொப்பர்ஸ் அணி சிறி காமாட்சி அணியை 175 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 47.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் ஜசிந்தன் 15 ஓட்டங்களையும் அஜித் 47 ஓட்டங்களையும் வரலக்ஷன் 90 ஓட்டங்களையும் டிலோஷன் 13 ஓட்டங்களையும் றசிகரன் 32 ஓட்டங்களையும் சாரங்கன் 13 ஓட்டங்களையும் சஜீவன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சிறி காமாட்சி அணி சார்பாக நிருஜன் 3 விக்கெட்டுக்களையும் சனன்தன் 2 விக்கெட்டுக்களையும் தீபன், சாம்சன், தர்ஷன்,சுவேந்தன், 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 28.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் பிரகோபன் 34 ஓட்டங்களையும் சயன்தன் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பாக அஜித் 4 விக்கெட்டுக்களையும் மதுஷன், தேவக்குமார் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற கிறாஸ்கொப்பர்ஸ் அணியினர் ஓல்ட்கோல்ஸ், டிறைற்றோன் அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லும் அணியுடன் 2 ஆவது சுற்றில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## பார்முலா-1 கார்ப்பந்தயம்; நெதர்லாந்து வீரர் முதலிடம்

பார்முலா-1 கார்ப்பந்தயத்தின் 5 ஆவது சுற்றுப் போட்டியில் நெதர்லாந்து வீரர் மக்ஸ் வெர்ஸ்டப் பென் முதலிடம் பிடித்துள்ளார்.

பார்முலா-1 கார்ப்பந்தயத்தின் 5ஆவது சுற்றுப்போட்டி இங்கிலாந்தின் சில்வர்ஸ்டோன் ஓடுதளத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பார்முலா-1 கார்ப்பந்தயத்தை தொடங்கி 70 ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் வகையில் நடந்த இந்தச்சுற்றில் வழக்கம் போல் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.

இதில் 306.198 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நெதர்லாந்து வீரர் மக்ஸ் வெர்ஸ்டப் பென் 1 மணி 19 நிமிடம் 41. 993 விநாடிகளில் எட்டி முதலிடம் பிடித்ததோடு 25 புள்ளிகளையும் தட்டிச் சென்றார்.

இதன்மூலம் மெர்சிடஸ் அணியின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டிய அவர் இந்த சீசனில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளார். அவரை விட 11.32 விநாடி பின்தங்கிய 6 முறை சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹமில்டன் 2 ஆவது இடத்தை பிடித்தார். பின்லாந்து வீரர் வால்டெரி போட்டோஸ் 3ஆவது இடத்தை பிடித்தார்.

இதுவரை நடந்துள்ள 5 சுற்று முடிவில் சம்பியன்ஷிப் பட்டத்திற்கான வாய்ப்பில் ஹமில்டன் 107 புள்ளிகளுடன் முதலிடத்திலும், வெர்ஸ்டப்பென் 77 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

அடுத்த சுற்றுப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி ஸ்பெயினில் நடைபெறவுள்ளது. (4)

## டோனியின் கப்டன்ஷிப் அருமையானது முரளிதரன் புகழாரம்



டோனியின் கப்டன்ஷிப் அணுகுமுறை மற்றும் அவரது கோட்பாடுகள் பார்ப்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,2007 ஆம் ஆண்டு நடந்த 20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இளம் வயது அணித்தலைவரான டோனி இந்திய அணிக்கு தலைமை தாங்கி கிண்ணத்தை வென்று கொடுத்தார்.

டோனியின் கப்டன்ஷிப் அணுகுமுறை மற்றும் கோட்பாடுகள் பார்ப்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும். ஏனெனில் அவர் பவுலரிடம் பந்தை கொடுத்து பவுலரையே தனது பந்து வீச்சுக்கு தகுந்த மாதிரி பீல்டிங்கை அமைத்து விட்டு பந்து வீசும்படி கூறுவார்.

அது சரியாக அமையாவிட்டால், பவுலரிடம் அனுமதி பெற்று தானே மீண்டும் பீல்டிங்கை உருவாக்குவார். பவுலர் நன்றாக வீசிய பந்தை பட்ஸ்மேன் சிக்ஸர் அடித்தால் பவுலரை பாராட்டுவார்.

சிக்ஸர் அடித்ததற்காக கவலைப்பட வேண்டாம். நல்ல பந்தை தான் பட்ஸ்மேன் தனது திறமையால் சிக்சராக அடித்துள்ளார் என்று கூறுவார். இது போன்ற பாராட்டுதல்கள் எல்லோரிடம் இருந்தும் கிடைக்காது.

சக வீரர் தனது தவறை திருத்திக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லோருக்கு தெரியும்படியாக வெளிப்படையாக கூறாது, தனியாக அழைத்து தெரிவிப்பார். அது அவருடைய வெற்றிகரமான ஒரு அணித் தலைவரின் செயற்பாட்டுக்கு உதாரணமாகும்.

அமைதியாக சிந்திக்கும் திறன் கொண்ட அவர் சீனியர் வீரர்கள் கூறும் கருத்துகளை கேட்டு ஆலோசித்து முடிவு எடுப்பார். மேலும் அணியை வெற்றிகரமாக நடத்தி செல்வதற்கு எந்த வீரர்கள் தனக்கு தேவை என்பதிலும் அவர் மிகவும் அவதானமாக இருப்பார் எனவும் முரளிதரன் தெரிவித்தார். (4)

## இணையத்தில் அதிகம் தேடப்பட்ட இந்திய கிரிக்கெட் வீரர் விராட்

உலகளவில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் இந்திய அணித் தலைவர் விராட் கோலி முதல் இடத்தை பிடித்துள்ளார்.

இந்திய அணியின் தலைசிறந்த வீரராக விராட் கோலி உள்ளார். விளம்பரம், சம்பளம் மூலம் அதிக வருமானம் பெறும் வீரராகவும் திகழ்கிறார்.

விராட் கோலிக்கு அடுத்தபடியாக சிறந்த வீரராக ரோகித் சர்மா உள்ளார். புகழ்பெற்ற பிரபலமாக எம்.எஸ்.டோனி திகழ்ந்து வருகிறார்.

இந்நிலையில உலக அளவில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்கள், கிரிக்கெட் அணிகள் பற்றி 'SEMrush' ஆய்வு நடத்தியது.

இதில் விராட் கோலி இந்த வருடம் ஜனவரியிலிருந்து ஜுன் வரை சராசரியாக 16.2 இலட்சம் முறை தேடப்பட்டு முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ரோகித் சர்மா பெயர் சராசரியாக 9.7 இலட்சம் முறையும், எம்.எஸ்.டோனி 9.4 இலட்சம் முறையும், ஜார்ஜ் மெக்கே 9.1 இலட்சம் முறையும், ஜோஷ் ரிச்சார்ட்ஸ் 7.1 இலட்சம் முறையும், ஹர்திக் பாண்ட்யா 6.7 இலட்சம் முறையும், சச்சின் டெண்டுல்கர் 5.4 இலட்சம் முறையும், கிறிஸ் மத்யூஸ் 4.1 இலட்சம் முறையும், ஷ்ரேயாஸ் அய்யர் 3.4 இலட்சம் முறையும் தேடப்பட்டுள்ளனர்.

அணிகளை பொறுத்தவரைக்கும் இந்திய அணி சராசரியாக 2.4 இலட்சம் முறை தேடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4)

## பருத்தித்துறை...

காலை மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மர்மமான பொதிகள் கடலில் மிதந்து வந்ததை கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

இதன்போது குறித்த பொதிகளை கடற்படையினர் சோதனையிட்டபோது அதற்குள் கஞ்சா போதைப்பொருள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா போதைப் பொருட்கள் 294 கிலோ எடை உடையவை என கடற்படையினர் தெரிவித்தனர். மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் அனைத்தும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,8,114)

## விபரீத முடிவெடு...

யில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் - துணுக்காய் வீதியைச் சேர்ந்த, 37 வயதுடைய இரகுநாதன் கௌரிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் இடியன் எனப்படும் துப்பாக்கியினால் தனக்குத் தானே வெடி வைத்து நேற்று முன்தினம் உயிரை மாய்த்துள்ளார். (ம-3)

## அமைச்சரவை...

அரசின் அமைச்சரவையில் 5 ராஜபக்ஷக்கள் இடம்பிடித்துள்ளனர்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதுடன், பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ள நிலையில், அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி வகித்து வருகிறார்.

இவர்களைத் தவிர பிரதமரின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

மேலும் ஜனாதிபதியின் மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவும் உள்நாட்டு பாதுகாப்பு, உள்விவகாரம் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார்.

இவரது புதல்வரும் ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சருமான சஷீந்திர ராஜபக்ஷ நெல், தானிய வகைகள், இயற்கைப் பசளை உணவு, காய்கறி, பழங்கள், மிளகாய், வெங்காயம், கிழங்கு உற்பத்தி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி, உயர் தொழிநுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சகோதரியின் புதல்வர் நிபுண ரணவக்க பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்களைத் தவிர ஜனாதிபதியின் மற்றுமொரு சகோதரரான பசில் ராஜபக்ஷ தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நபராக இருப்பார் என அரசியல் அவதானிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## மூன்று பேராசிரி...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும் கணிதப் புள்ளி விபரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவின் பெயர் முதலாவதாகவும் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி ஆகியோரின் பெயர்கள் முறையே இரண்டாவது, மூன்றாவதாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களால் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும், தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் - ஒவ்வொரு விண்ணப்பதாரிகளையும் சுற்றறிக்கையின்படி தனித்தனியாக மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர்.

சுயாதீன மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்களின் தனித் தனி மதிப்பீட்டுப் புள்ளிகள், பேரவை உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகள் ஆகியவற்றின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் திறமைப் பட்டியல் பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதிகாரியினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு ஊடாகத் தனது பரிந்துரையை ஜனாதிபதிக்கு முன்வைக்கும்.

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின்படி, ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருவரைத் தெரிவு செய்வார். (ம-3,9)

## முக்கிய அமைச்சு...

கத்தில் உருவாக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள் அமைச்சு, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் புதிய அமைச்சரவையில் காணாமலாக்கப்பட்டுள்ளன.

கல்வி மறுசீரமைப்பு பரீட்சைகள் மற்றும் பல்கலைக்கழக தொலைநோக்கு கல்வி என்ற இராஜாங்க அமைச்சுக்கு வர்த்தமானி வெளியிடப்பட்டும் அந்த இராஜாங்க அமைச்சு பதவி எவருக்கும் இதுவரையில் வழங்கப்படவில்லை. (ம-3)

## வடக்கு இணைத்...

நியமனம் தொடர்பில் மாவட்ட செயலகத்துக்கு ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழர்களின் ஏக...

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் கூட்டமைப்பு இல்லை என பசில் ராஜபக்ஷ மற்றும் மகிந்த அணியினர் தெரிவித்து வரும் நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டமைப்பு இம்முறை 10 ஆசனங்களை பெற்றுள்ளது. எதிரணியில் இருக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்து தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்போம். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ராஜபக்ஷ அரசு எம்முடனேயே பேசியாக ஆக வேண்டும்.

தமிழர்களின் தீர்வு தொடர்பில் அரசுக்கு தேவையான ஒத்துழைப்பை கூட்டமைப்பு தரும்.

அரச தரப்பினர் வீர வசனம் பேசாமல் தமிழர்களின்நலன்களில் அக்கறை செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். (ம-3)

யாழில் வீழ்ந்த பரிசு

12.08.2020 மஹஜன 4212 றோ மூலம் யாழ்.முகவர் S.கனகலிங்கம் ஊடாக விற்பனையாகிய ரிக்கட்களில் ரூபாய் 100,000/= வெல்லப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றேன். (C-039)

## ஒன்றிணைந்து...

லான பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நேற்று புதன்கிழமை கண்டி தலதா மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டது.

இந்நிலையில் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் தமது வாழ்த்தினைத் தெரிவித்துள்ளனர்.

தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிற்கும் புதிய அமைச்சரவைக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்றன், சுபீட்சமானதும் அமைதியானதுமான இலங்கையை உருவாக்குவதற்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் அதேவேளை இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் எதிர்பார்த்திருக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். (ம-3)

## செஞ்...

இடைக்கட்டுச் சந்தியில் நடைபெறவுள்ளது.

செஞ்சோலை நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் குறித்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப் படை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியாகவிருந்த செஞ்சோலை சிறுமிகள் பராமரிப்பு நிலையத்தின் மீது திட்டமிட்ட துல்லியமான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது. இந்த தாக்குதல் சம்பவத்தில் 61 சிறுமிகள் கொல்லப்பட்டதுடன் 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12-08-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1045
வெற்றி இலக்கங்கள் P 9 0 8 0 4 2

மஹஜன சம்பத
திகதி 2020/08/12
சீட்டிழுப்பு இலக்கம் 4212
N 2 7 8 0 4 9

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 12-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2507
U 11 44 63 66

மெகா பவர்
திகதி 12/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0579
H 25 33 53 66 67

செவன
திகதி 12/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 286
Q 36 37 42 49

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1008
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.08.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,055,955/-
வெற்றி இலக்கங்கள் 43 51 57 68 V

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3350 திகதி: 2020.08.12
ஊதா புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 27 57 60 P
அடுத்த சனிக்கிழமை ஜக்பொட் 36,337,179.50

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2889 வர்ணம் பச்சை திகதி 12.08.2020
வெற்றி இலக்கங்கள் 10 28 50 54 கன்னி
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,369,312
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 357 திகதி 12.08.2020 வர்ணம் நீலம்
M 29 54 68 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,168,392
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## தமிழ் மக்கள்...

எத்தனை தடைகளைத் தாண்டி வந்து வென்றுள்ளேன்?

பண பலம் இல்லாமல், பதவி பலம் இல்லாமல், போதுமான ஆட்பலம் இல்லாமல், அரசியல் பின்னல் வலையமைப்பு இல்லாமல், அண்மை வரையில் ஒருவருக்கொருவர் பரீட்சயமில்லாத ஐந்து கட்சியினரை ஒன்று சேர்த்துக் கொண்டு, ஒவ்வொருவருக்கு அடுத்தவர் மேலான அவர்களின் நம்பிக்கையின்மையை சமாளித்துக் கொண்டு, எனக்கு எதிரான பொய்யான பரப்புரைகளை எதிர்கொண்டு மிகவும் குறுகிய ஒரு காலப்பகுதியில் எனது 81 வது வயதில் பெற்ற இந்த வெற்றி குறித்து திருப்தி அடையாமல் இருக்க முடியுமா? அரசியலில் எனது இருப்புக்கும் எனது நடவடிக்கைகளுக்கும் எனது கொள்கைகளுக்கும் இந்த தேர்தலில் உடனடியாகவே மக்கள் அங்கீகாரம் தந்து விட்டார்கள்.

ஆனால் இன்றைய கால தமிழ் மக்களின் தேர்தல் சிந்தனையையும் நடந்த தேர்தல் முடிவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மனம் வருந்துகின்றது. எமது வடகிழக்கு மாகாண மக்களின் எதிர்காலம் பற்றி பாரிய கரிசனை எழுகின்றது.

"விக்னேஸ்வரன்மார்களும் கஜேந்திரகுமார் மார்களும் கொள்கைகள் பற்றி பேசுகின்றார்கள். அவர்களுக்கு அவர்கள் மக்கள் பற்றி எதுவுமே தெரியவில்லை போலத் தெரிகிறது. ஆகவே இந்தத் தேர்தலில் அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும்" என்ற ரீதியில் பதவி நிலைகளில் இருந்து பணம் அரசாங்க அடிவருடிகளிடம் பறந்து வந்ததோ என்று எண்ண வேண்டியுள்ளது.

ஆனால், கடந்த 10 வருட கால செயற்பாடுகளை பார்க்கின்றபோது மக்கள் மீது நாம் குற்றம் சொல்ல முடியாது. தமிழ் தேசிய சிந்தனையில் இருந்து சலுகைகளை நோக்கி அடிப்படையான ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கூற முடியாது.

ஆனால்,கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளின் மீது மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியே வாக்களிப்பில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட காரணமாகும். ஆகவே, தமிழ் தேசியத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம் கொள்ள முடியாது.

பரவலாக வாக்குகள் தமிழ் தேசிய கட்சிகளுக்கு இடையே பிரிந்து சென்றுள்ளன. எம் மக்களை தொடர்ச்சியாக வறுமை, வேலையின்மை, அபிவிருத்தியின்மை என்று திட்டமிட்டு வைத்திருப்பதனூடாக முகவர்களை அல்லது தமது அடிவருடிகளை பயன்படுத்தி சலுகை அரசியலை அரசாங்கம் நகர்த்துகின்றது.

**02. நீங்கள் கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பதற்கு தயார் என்று சொன்னதாக செல்வம் அடைக்கலநாதன் கூறியிருப்பதாக ஒரு செய்தி வெளி வந்திருக்கிறதே. அது உண்மையா?**

**பதில்:** அப்படி நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. சில தினங்களுக்கு முன்னர் நான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பின்வருமாறுதான் கூறியிருந்தேன்:

"எமது இனத்தின் நன்மை கருதி, தெரிவுசெய்யப்பட்டுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்ட ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன. இதற்கு ஒத்துழைப்பு வழங்க நானும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் தயாராக இருக்கின்றோம்."

இங்கு நான் அழுத்தம் திருத்தமாக கொள்கை அடிப்படையில் என்று குறிப்பிட்டிருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கை என்னவென்று குறிப்பிட வேண்டும்.

இணைந்த வடக்கு-கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு தரப்பட வேண்டும். இன்றேல் இறுதித் தீர்வு தொடர்பில் சர்வதேச மேற்பார்வையின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பும் அதன் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

இங்கு நடந்த இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த விடயங்களில் இதய சுத்தியுடன் செயற்படும் எந்தக் கட்சியுடனும் ஒத்துழைத்து செயற்படுவதற்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தயாராக இருக்கின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அது பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதுபற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடாது விட்டாலும், அதில் வெற்றியீட்டிய சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தேர்தல் பிரச்சாரத்தின்போது இதுபற்றி வலியுறுத்தி இருந்தார்கள். ஆகவே, தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த விடயங்களில் தனது நிலைப்பாடு என்ன என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். தமது செயல்களில் நம்பிக்கை ஏற் படுத்தும் சில நடவடிக்கைகளை செய்யவேண்டும். அதை செல்வம் முதலில் செய்யட்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)


### கிளுவை கதிகால் தேவை

கிளுவங்கதிகால்கள் தேவை. விலைதீர்த்து வெட்டி எடுக்கப்படும். தயவு செய்து தரகர்கள் தேவையில்லை. உரிமையாளர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

இளவாலை, வசாவிளான், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 315 1326

### வணிகத்துறையில் வேலை வாய்ப்பு

வணிகத்துறையில் முன்னணியில் திகழும் எமது லங்கா நிறுவனமானது தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் நிறுவ உள்ளதால் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யவுள்ளது.

- அலுவலக மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்

தகைமை:–
O/L, A/L மற்றும் மேற்தகைமை உடையோர் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை 18-35 (3568)

உடன் அழைக்க :- 077 157 1699

### FALC FRENCH LANGUAGE CENTRE

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan(Trained in France) (C-030)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 22.08.20 சனி 8 மணி

23/2 சோமசுந்தரம் அவெனியு,
சுண்டிக்குளி. 0779789456
(கச்சேரிக்கு அண்மையில்)

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.



### நேசம்மிக்க யாவருக்கும் வணக்கம்!

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

**டக்ளஸ் தேவானந்தா**
(செயலாளர் நாயகம்-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

யாழ். மாவட்டத்தில் கட்சிக்காகவும் தலைவரின் வெற்றிக்காகவும் உழைத்த இனிய உறவுகளே, தோழர்களே, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்திய நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எமது தலைவரின் வழிமுறைக்கேற்ப அபிவிருத்தி அன்றாடப் பிரச்சினை அரசியலுரிமை போன்ற நியாயமான எம் மக்களின் விடுதலைக்காகவும் நாம் ஒன்றுபட்டு உழைப்போம். பல இன்னல்களையும் இடைஞ்சல்களையும் துச்சமென மதித்து நகர்ந்து வந்த எமக்கு இன்றைய காலம் மிகவும் உச்சபட்சமானதாகும். மனங்களில் சோர்ந்து போகாமல் இருக்க பல்லாயிரக்கணக்கான மக்கள் எமக்கு ஆணை தந்துள்ளனர். இந்த ஆணையின் நிமித்தம் ஆற்ற வேண்டிய கடமைகள் அதிகம். எனவே, மேன்மை தங்கிய ஜனாதிபதி மற்றும் பிரதமர் அவர்கள் எமது தலைவரான டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு கடற்றொழில்த் துறை அமைச்சுப் பதவியினையும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவியினையும் வழங்கியுள்ளார். ஆகவே இனி வரும் காலங்களில் நாம் முன்னோக்கி நகர வேண்டுமென்பது எங்கள் ஒவ்வொருவரது கடமையாகும். இது போலவே வன்னி மாவட்டத்திலும் எங்கள் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சிக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளனர். ஆகவே நாம் மக்களுக்கு நன்றி கூறுவதோடு அதற்காக உழைத்த யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முயல்வோம்! வெல்வோம்! உளம் சோரோம்!

என்றும் அன்புடன்
**கந்தசாமி கமலேந்திரன் (கமல்)**
முன்னாள் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
(C-034)

### காணி தேவை

யாழில் 1.2 அல்லது 3 பரப்பு காணி தேவை. K.K.S Road, பலாலி வீதி, திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் விரும்பத்தக்கது. (3538)

தொடர்பு : 077 400 1836

### North Lanka IIT City Campus

M.Ed புதிய வகுப்புக்களுக்கான விரிவுரைகள்

ஆரம்பம் : 15.08.2020 சனிக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். (3566)

076 750 4535, 077 884 9677, 077 068 1958 பதிவாளர்

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய் • மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (C-006)

0768226240

### காணிகள் / வீடுகள்

கொக்குவில் 2 3/4 பரப்பு காணி, மாலுசந்தி (அல்வாய்) 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

இலங்கையில் எப்பாகத்திலுக்கும் காணிகள், வீடுகள், கடைகள் என்பவற்றில் சில உடன் விலைக்கு வாங்குவோம். (3566)

தொடர்புகளுக்க
077 522 1132, 076 534 6562, 077 147 9416

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி இன்பராணி தவராசா**
(ஜெகிதா அக்காகுட்டி)

தோற்றம் :- 22.10.1977 மறைவு :- 15.07.2020

6ம் வட்டாரம், கொங்காதேவி ஒழுங்கை, மயிலிட்டியை பிறப்பிடமாகவும் 6ம் ஒழுங்கை, சுப்பர்மடம், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இன்பராணி தவராசா அவர்கள் கடந்த 15.07.2020 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் தவராசா - இலட்சுமியின் அன்பு மகளும், கந்தசாமி, செல்வமணி, இளையதம்பி, செல்லமுத்து, வங்காளப்பா, வங்காளத்தை ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

நாளை (14.08.2020) வெள்ளிக்கிழமை தெணியம்மன் மண்டபத்தில் காலை 6 மணிக்கு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து சுப்பர்மடத்தில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். (C-038)

6ம் ஒழுங்கை, சுப்பர்மடம், பருத்தித்துறை.
தவராசா - இலட்சுமி குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.